Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 22 (23.06.2003) திங்கட்கிழமை இதழ்: 263

துரிதமாகவும்,துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303,K.K.S Road, Jaffna.T.P 021-222 2670, 222 3588
Fax-222 3214,Email-del-smskr@eureka.lk.
(சி-1037)

## ‘பொங்கு தமிழ்’ பிரகடனம் ஐ.நா. செயலாளருக்கு!

(யாழ்ப்பாணம்)

அடுத்தவாரம் நடைபெறவிருக்கும் ‘பொங்கு தமிழ்’ எழுச்சி நிகழ்வில், “பொங்கு தமிழ் பிரகடனம்” ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இப்பிரகடனம், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்கப் படவுள்ளது. இதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அதேவேளை, “எமது நிலம் எமக்கு வேண்டும்” என்ற தொனிப்பொருளில், எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறும் ‘பொங்கு தமிழ்’ எழுச்சி நிகழ்வுக்கு - யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தமது ஆதரவினைத் தெரிவித்திருப்பதுடன், பூரண ஒத்துழைப்பினை வழங்குவதற்கும் முன்வந்துள்ளது.

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அமைந்துள்ள இணையத்தின் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு

## லண்டனில் யாப்பு, சட்ட நிபுணருடன் பிரதமர் ரணில் கலந்தாலோசனை!

(கொழும்பு)

அரசியல் நிர்வாக இடைக்காலக் கட்டமைப்பை, வடக்கு - கிழக்கில் உருவாக்குவது தொடர்பாக, லண்டனிலுள்ள அரசியல் யாப்பு, சட்ட நிபுணர்களுடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆராயவுள்ளார் எனத் தெரியவருகிறது.

அரசியல் நிர்வாக இடைக்காலக் கட்டமைப்பின் வடிவம் மற்றும் உள்ளடக்கம் என்பன குறித்தே, லண்டனிலுள்ள சட்ட மற்றும் அரசியலமைப்பு நிபுணர்களுடன் பிரதமர் கலந்தாலோசனை செய்யவுள்ளார்.

இதற்காகவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், சட்டமா (10 ஆம் பக்கம் பார்க்க)

# லண்டன் சென்ற ஹெல்கிஸன் பாலாவுடன் பேச்சு நடத்துவார்!

### விண்ணாணம் விநாசியர்



எம்பஸிக்காரர் எக்கணம் விடுறதில் லையெண்டுதான் நிக்கினம்!

## இன்று ரணிலுடன் முக்கிய சந்திப்பு

(லண்டன்)

**நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் மற்றும் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர், லண்டனில் இவ்வாரம் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.**

**லண்டனுக்குச் சென்றுள்ள நோர்வேத் தூதுக்குழுவினர் - அங்கு தங்கியிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை இன்று சந்தித்து, முக்கிய விடயங்கள் குறித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகத் தெரியவருகிறது.**

**இதனைத் தொடர்ந்து - நோர்வே தூதுக்குழுவினர், இந்தவாரம் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து விரிவான பேச்சுக்களை நடத்தவுள்ளனர். பின்னர் - கொழும்பு வரும் இத்தூதுக்குழுவினர், அங்கிருந்து கிளிநொச்சிக்கும் செல்வர் என்று தெரியவருகிறது.**

## உட்கட்சிப் பூசலைத் தீருங்கள்; கூட்டணியிடம் நிருபம் சென்!

தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் ஏற்பட்டிருக்கும் உட்கட்சிப் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு, இந்தியத் தூதுவர் நிருபம்சென் - கூட்டணித் தலைவர்களிடம் வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இந்தியத் தூதரகத்திற்குச் சென்ற கூட்டணித் தலைவர்களிடமே, நிருபம் சென் இவ்வாறு வலியுறுத்தினார்.

90 நிமிடங்கள் நீடித்த இந்தச் சந்திப்பில்,

புலிகளின் கடும் போக்குக்கு கூட்டணி ஆதரவு வழங்க வேண்டாம் என்றும் - புலிகள், எதிர் அணியைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொலை செய்வதைத் தடுத்துநிறுத்த, கூட்டணி தமது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்றும் நிருபம் சென் கேட்டுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பயணம் முடிந்தும் சில நாட்கள் லண்டனில் ரணில் தங்குவார்!

### பாலசிங்கத்தைச் சந்திப்பதில் ஆர்வம்

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு, லண்டனுக்குச் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - அங்கு மேலும் சில தினங்கள் தங்கியிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உத்தியோகபூர்வ விஜயத்தின் பின்னர் - தனிப்பட்ட ரீதியில், லண்டனில் சில தினங்கள் தங்கியிருக்கவுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசலாம் எனவும், இச்சந்திப்பில் அவர் நாட்டம் கொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஒவ்வொரு படகிலும் கண்காணிப்பாளர்; இன்னமும் 50 பேர் மேலதிகமாகத் தேவை!

### திலக் மாரப்பன கண்காணிப்புக்குழுவிடம் கோரிக்கை

வடக்கு-கிழக்குப் பகுதிகளில், போர்நிறுத்தத்தைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு, அரசாங்கம் கோரவுள்ளதாக, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

கடற்பகுதியில் முழுமையான கண்காணிப்பை மேற்கொள்ளவேண்டுமானால், மேலும் ஐம்பது கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தையடுத்தே, இந்த முடிவை அரசாங்கம் எடுத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பான உத்தியோகபூர்வ வேண்டுகோள், அரசாங்கத்தினால் - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முன்வைக்கப்படவுள்ளது.

கடற்படைப் படகுகளில், கண்காணிப்பாளர்கள் முழுநேரமும் தங்கியிருந்து கண்காணிப்பில் ஈடுபட வேண்டும். இதன்மூலமே கடலில் ஏற்படும் முறுகல்களைத் தடுக்க முடியும் என்றும் திலக் மாரப்பன மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - 57 கண்காணிப்பாளர்கள், யுத்தநிறுத்தத்தைக் கண்காணிக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபடுவார்கள் என்று கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிறகர்டோட்ரயர் தெரிவித்தார்.

## அமைச்சர் மிலிந்த வீட்டில் சினைப்பர் தாக்குதல் தளம்!

### 15 எஸ்.ரி.எவ். மேலதிக பாதுகாப்பில்

விஞ்ஞான கைத்தொழில், பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரின் வீட்டில், சினைப்பர் தாக்குதலுக்கான தளம் அமைக்கப்பட்டிருப்பதுடன், மேலதிக பாதுகாப்புக்கென விசேட அதிரடிப்படையினரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவுக்கு மேலதிகமாக, பதினைந்து விசேட அதிரடிப்படையினர், அமைச்சர் மிலிந்த மொறகொடவின் பாதுகாப்புக்கென அமர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கடற்படைத் தலைமை அதிகாரிக்கு கப்பல் தாக்குதல் விபரம் தெரியும்!

### கடற்படை வட்டாரங்கள் தகவல்

விடுதலைப் புலிகளின் கப்பல் கிழக்குக் கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, கடற்படையின் தலைமை அதிகாரி வைஸ் அட்மிரல் மொகான் விஜயவிக்கிரமவுக்குத் தெரியாது என்று, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தபோதும் - வைஸ் அட்மிரல் மொகான் விஜயவிக்கிரம, இத்தாக்குதல் பற்றி முழுமையாக அறிந்திருந்தார் என்றே கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வைஸ் அட்மிரல் மொகான் விஜயவிக்கிரமவுக்கு, இத்தாக்குதல் பற்றி ஒழுங்கான முறையில் தகவல் அனுப்பப்படவில்லை(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -975)

# பொ.ஐ.முன்னணி ஐ.நாவில் ரணில் அரசுபற்றி முறையிடும்

## மனித உரிமைகளை மீறுவதாகப் புகார்

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளுக்கு எதிராக, ரணில் அரசு, மனிதஉரிமை மீறல்களைத் தொடர்ந்து புரிந்து வருவதாக - ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திடமும், சர்வதேச மனித உரிமை ஆணைக்குழுவினரிடமும் பொது ஜன ஐக்கிய முன்னணி முறையீடு செய்யவுள்ளது.

இது சம்பந்தமாக, பொதுஜன ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள்- அடுத்த மாதம் முதல் வாரத்தில் அமெரிக்காவுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுரா பண்டாரநாயக்க, தினேஷ் குணவர்த்தன, சரத் அமுனுகம ஆகியோரே இந்தப் பயணத்தை மேற்கொள்ள இருக்கின்றனர்.

# 5 ஆம் தர மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சைகள்

## உடுவில் கல்விக்கோட்டம் ஏற்பாடு

(உடுவில்)

5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களின் நன்மை கருதி, உடுவில் கல்விக்கோட்ட அதிபர்கள் இணைந்து, முன்னோடிப் பரீட்சைகளை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

இதற்கமைய - ஒவ்வொரு மாதமும் முதலாம், மூன்றாம் வாரத்தில், பாடசாலைகள் ரீதியாக பொதுப் பரீட்சை நடத்தப்படவுள்ளது. இதற்கான வினாத்தாள்கள் கோட்ட மட்டத்தில் வழங்கப்படுமெனவும், இதைப் பற்றி மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர், கோட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் சி.நவரத்தினத்திடம் பெற்றுக்கொள்ளலாம். இம்முறை 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை, டிசெம்பர் மாதம் நடைபெறவிருப்பது தெரிந்ததே.(101)



யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கான வெற்றிக்கேடயத்தை - யாழ்.அரச அதிபர் பத்மநாதன் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# வட-கிழக்கு பொலிஸாருக்கு தமிழ்மொழிப் பயிற்சி!

## அரசகரும மொழித்திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பணியாற்றும் பொலிஸாருக்குத் தமிழ்மொழிப் பயிற்சிகளை வழங்கப் போவதாக, அரசகரும மொழிகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள 67 பொலிஸ் நிலையங்களிலும் பணியாற்றும் பொலிஸாரில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு முதற்கட்டமாக தமிழ்மொழிமூலப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

அடுத்தகட்டமாக, ஏனைய பொலிஸாருக்கும் இப்பயிற்சி வழங்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. தமிழ்ப் பகுதிகளில் கடமையாற்றும் பொலிஸாருக்கு தமிழ் மொழி தெரியாததால், அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்ட புகார்களையடுத்தே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

## அழைப்புக் கட்டளை
## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

வழக்கு.இல:356

சாந்தாராம் பெண் வத்சலா,
*'சிதம்பர வாசா'*
*கைதடி மேற்கு, கைதடி,*
*சாவகச்சேரி.*
வழக்காளி

எதிர்

இராமகிருஸ்ணன் சாந்தாராம்
*தும்பளை,*
*புலோலி, பருத்தித்துறை.*
எதிராளி

*மேற்படி எதிராளிக்கு,*

மேற்படி வழக்காளி தங்களிடமிருந்து, மணநீக்கம் பெறுவதற்கு இந்த நீதிமன்றில் உமக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளாராதலினால், இவ்வழக்குக்கான பராதுக்கு உமது மறுமொழியை 2003 ஆம் ஆண்டு 07 மாதம் 16 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக இந்நீதிமன்றில் கோப்பிடுமாறு வேண்டப்படுவதோடு, சொல்லப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் மறுமொழியை அணைக்கத்தவறும் பட்சத்தில் எதிராளியான நீவீர் இல்லாமலே ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்படும் என்பதை அறிந்துகொள்ளுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

பதிவு பெற்ற சட்டத்தரணி மூலம் நீங்கள் தோன்றாவிடின் சட்டமுறையான அறிவித்தலுக்கான யாவற்றையும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரி ஒன்றை மன்றில் கோப்பிடுமாறு தேவைப்படுத்தப்படுகின்றீர்.

2003 ஆண்டு 06 மாதம் 10 திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி
து.ஜெயதீஸ்வரன்
பதிவாளருக்காக
மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி.
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி.

வரைவு சி.வீரகத்திப்பிள்ளை
சட்டத்தரணி (389)

# நல்லூர் கோட்ட தமிழ்த் தினப் போட்டி வெற்றிபெற்ற மாணவர்களின் விபரம்

நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற தமிழ்த் தினப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன. அதில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு -

### பிரிவு 1

**வாசிப்பு**

சி.துஷானி (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), ம.விதுர்ஷா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), த.கஜேந்திரன் (ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலை).

**ஆக்கத்திறன்**

ச.பக்தஜெனனி (யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), சு.சஞ்சீபன் (கோண்டாவில் இந்து ம.வி.), ச.சர்மி (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை).

**பேச்சு**

அ.சஞ்ஜீவா (கொக்குவில் மேற்கு சி.சி.த.பாடசாலை), க.கஜானி (கல்வியங்காடு இ.த.க. பாடசாலை), கு.சுமிதா (யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை).

**பாவோதல்**

ந.கோபிகா (ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலை), செ.ஹிஷாங்கி (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), யோ.சங்கீதா (யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை).

**இசையும் அசைவும்**

ஜெ.தர்சிகா (நல்லூர் ஞானோதய வித்தியாலயம்), ஜெ.டிவ்யா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), தி.கௌரி (திருநெல்வேலி றோ.க.த.க. பாடசாலை).

**நடனம் (தனி)**

ந.நிவேஜா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), செ.பிரவீனா (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), கி.பஞ்சுகா (யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை).

### பிரிவு 2

**வாசிப்பு**

மு.கஜிந்தா (உயரப்புலம் மெ.மி.த.க.பாடசாலை), மு.சுபிதா (கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்), க.ஜன்சி (கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம்).

**பேச்சு**

க.உஷாந்தன் (யாழ். இந்துக் கல்லூரி), சு.விபிசாந் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கு.ஜிந்துஷா (கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம்).

**பாவோதல்**

ச.சுஜிந்தா (முத்துத்தம்பி வித்தியாலயம்), ம.சுபாஜினி (இந்து மகளிர் கல்லூரி), ந.றஜிதா (பெரியபுலம் மகாவித்தியாலயம்).

**இசை (தனி)**

இ.அனுஜா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), க.ரூபவினோத் (யாழ். இந்துக் கல்லூரி), ச.இராகுல் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**நடனம் (தனி)**

ர.சௌமியா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), தே.விதுர்சன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), தி.சுலக்சனா (கோண்டாவில் இராமகிருஷ்ண வி.)

**வாத்தியக்கருவி (வீணை)**

சி.அபயன் (யாழ்.இந்துக் கல்லூரி)

### பிரிவு 3

**பேச்சு**

பி.யோகபிரசாத் (யாழ். இந்துக் கல்லூரி), லி.நரேஸ்குமார் (கொக்குவில் இந்துக் கல்லூரி), சி.டர்சியா (கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.)

**பாவோதல்**

ம.கனிஜா (கனகரத்தினம் மத்திய ம.வி.), ர.பிரதீபா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ச.ஜனனி (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**இசை (தனி)**

செ.உஷாந்தினி (கோண்டாவில் இந்து ம.வி.), ஸ்ரீ.கபிலன் (யாழ். இந்துக் கல்லூரி), அன்னபூர்னேஸ்வரி (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**நடனம் (தனி)**

பா.அனுசன் (பெரியபுலம் ம.வி.), பு.தர்ஷிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**வாத்தியக்கருவி**

த.நிரூஷன் (யாழ். இந்துக் கல்லூரி), ஹ.காஞ்சனா (நல்லூர் இந்து த.க.பாடசாலை)

### பிரிவு 4

**பேச்சு**

ம.அருளினியன் (யாழ். இந்துக் கல்லூரி), ஆ.இந்திஜா (நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி), ம.றிசோனா (நல்லூர் இந்து த.பெ.பாடசாலை)

**பாவோதல்**

சி.சாந்தகுமார் (கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்), ஸ்ரீ.தாரணி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), தி.ரேகா (நல்லூர் ஸ்தான சீ.சீ.த.க. பாடசாலை).

**நடனம் (தனி)**

த.சசிதரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), லெ.குகன்ஜா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) த.லோஜினி (பெரியபுலம் ம.வி.).

**இசை (தனி)**

ந.சாகித்யா (கோண்டாவில் இந்து ம.வி.), அ.அமிர்தலோஜனன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), த.ஜெயடினேஷ் (யாழ். இந்துக் கல்லூரி).

**வாத்தியக்கருவி**

சி.அருணன் (யாழ். இந்துக் கல்லூரி), ப.தயாநிதி (கனகரத்தினம் ம.ம.வி.), ப.காயத்திரி (கொக்குவில் இந்துக்கல்லூரி).

### பிரிவு 5

**பேச்சு**

வை.அபர்ணா (கொக்குவில் இந்துக் கல்லூரி), ப.சந்திரகுமார் (யாழ். இந்துக் கல்லூரி), த.மயூரன் (முத்துத்தம்பி ம.வி.).

**பாவோதல்**

மு.வஜிறா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**இசை (தனி)**

க.தர்சனன் (யாழ். இந்துக் கல்லூரி), சி.தர்சா (கனகரத்தினம் ம.ம.வி.), கு.தாரணி (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**நடனம் (தனி)**

நா.கஜேந்திரா (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெ.துஷா (கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.), மு.ராதிகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

**வாத்தியக்கருவி**

ப.றோகினி (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**குழு 1 - நடனம்**

கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். இந்துமகளிர் கல்லூரி, பெரியபுலம் மகாவித்தியாலயம்.

**இசை**

யாழ். இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, நல்லூர் இ.த.பெ. பாடசாலை.

**குழு 2 - இசை**

கனகரத்தினம் ம.ம.வி., யாழ். இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி.

### திறந்த போட்டி

**விவாதம்**

யாழ். இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி,

**தமிழறிவு வினாவிடைப் போட்டி**

இந்துமகளிர் கல்லூரி, கோண்டாவில் இந்து ம.வி.

**நாட்டிய நாடகம்**

பெரியபுலம் ம.வி., யாழ். இந்து மகளிர் கல்லூரி,

**நாட்டுக்கூத்து - சிந்துநடை**

யாழ்.இந்துக்கல்லூரி.

**நாடகம்**

யாழ். இந்து மகளிர் கல்லூரி, கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.

**வில்லுப்பாட்டு**

பெரியபுலம் மகாவித்தியாலயம்.

(127)

## மனித உரிமை ஆணைக்குழு; இடம்பெயர்ந்தோரின் முகாமுக்கு விஜயம்!

மனிதஉரிமை ஆணைக்குழுப் பிரதிநிதிகள் குழு - வலி.வடக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை முகாம், கந்தரோடை முகாம், சங்கானை அமைதி முகாம் ஆகிய முகாம்களிலுள்ள மக்களைச் சந்தித்து, அவர்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடலொன்றையும் நடத்தினர்.

இதன்போது, வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களின் சார்பில், யாழ். மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத்தால் - மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## நொச்சிமோட்டை லொறிவிபத்தில் இளைஞன் பலி

வன்னிக்குச் சீமெந்து ஏற்றிச் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்று, வவுனியா - நொச்சிமோட்டைக்கு அருகில் பாதையை விட்டுவிலகி விபத்துக்குள்ளானதில், லொறியில் பயணம் செய்த இளைஞன் ஒருவர் உயி ரிழந்தார்.

250 பைக்கட் சீமெந்துகளை ஏற்றிக்கொண்டு வவுனியாவிலிருந்து நேற்றுமுன்தினம் மாலை வன்னிக்குச் சென்றுகொண்டிருந்த தனியார் லொறியே விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் - கனகராயன் குளத்தைச் சேர்ந்த இளைஞனே உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.


நிறைஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார் (இரு வேடம்),
தேவயானி நடிப்பில்
சூரிய வம்சம்
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
தினசரி இரவு. 8.45 (பு.நே)
RED DRAGON
(சி-974)

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சரத்குமார், மீனா, ரம்யா கிருஷ்ணன் நடித்த
கே.எஸ்.ரவிக்குமாரின்
பாறை

10.30, 2.30, 6.30, 9.30
(சி-973)


## மரண அறிவித்தல்

### விசுவநாதர் பொன்னையா

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 13 | 05 |
| 07 | 05 |
| 1917 | 2003 |



பழைய கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவநாதர் பொன்னையா அவர்கள் 05-05-2003 ஆம் திகதி சிவபதமடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற விசுவநாதர் - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், கனகலிங்கம், நிர்மலா தேவி, சத்தியலிங்கம், கலாதேவி, கணேசலிங்கம், சுந்தரலிங்கம், நித்திய தேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவராணி, சாம்பசிவம், விஷ்ணு, தர்மராஜா, ஜெயதிலகராணி, தவம், ஜெயசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அனுஷா, அகல்யா, அகிலன், லாவண்யா, சிந்துஜா, வேணிஜா, பிரவீன், பிரணவன், சுயித்தா, சுபித்தா, சஞ்யே, மிதுனன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்புச் சகோரனும் இராசலட்சுமியின் அன்பு அண்ணரும் ஆவார்.

*விபரங்கட்கு:-*

T.P:- (416) 972-0540
ஜேர்மனி :- 2131-543291
பிரித்தானியா :- 208-5184214

(சி/1101)

# உலகின் முக்கிய பிரச்சினைகளின் மத்தியஸ்தர்கள் ஒஸ்லோவில்!

## எரிக் சொல்ஹெய்மும் பங்கேற்கிறார்

உலகில் முக்கிய பிரச்சினை நிலவிய நாடுகளில் மத்தியஸ்தப் பணியில் ஈடுபட்ட - பன்னிரெண்டு மத்தயஸ்தர்கள் ஒஸ்லோவில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

மேற்காசிய, இலங்கை, போல்கன் நாடுகளில் மத்தியஸ்தர்களாகப் பணியாற்றிய அனுபவங்கள் குறித்தும், பிரச்சினைகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படும்.

போல்கன் பிரச்சினையில் மத்தியஸ்தராகப் பணியாற்றிய முன்னாள் சுவீடன் பிரதமர் கார்ல் பில்ட், மேற்காசியப் பிரச்சனையில் மத்தியஸ்தம் வகித்த அமெரிக்க ஜெனரல் அன்ரனி கிளயர், நோர்வேயைச் சேர்ந்த ரெல்ஜோ லோட் ல்ர்சன் மற்றும் எரிக் சொல்ஹெய்ம், ஆப்கானிஸ்தானில் மத்தியஸ்தப் பணியாற்றிய லட்டார் பிராமி உட்பட பன்னிரெண்டு பேர் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர்.

# இடைக்கால நிர்வாகத்துக்கு சந்திரிகாவை வற்புறுத்துங்கள்

## ஜப்பானிய தூதரக அதிகாரியிடம் சுரேஷ் கோரிக்கை

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டுமென, ஈ.பி.ஆர்.எல்.எப் செயலாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன், ஜப்பானியத் தூதரக அதிகாரியிடம் கோரிக்கை விடுத்தார்.

ஜப்பானியத் தூதரகத்தின் இரண்டாவது செயலாளரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே - சுரேஷ் பிறேமச்சந்திரன் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

சர்வதேச சமூகம் - புலிகளுக்கு அழுத்தம் கொடுப்பதைக் கைவிட்டு, இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து, பிரச்சினைகளைத் தீர்க்குமாறு வலியுறுத்தவேண்டுமென அவர் மேலும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

### முன்பள்ளிகளின் திறனாய்வு விழா

(கொக்குவில் மேற்கு)

கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன், அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால் அப்பகுதியில் நடத்தப்படும் முன்பள்ளிகளின் திறனாய்வு விழா - அக்கராயன் டானியல் மைதானத்தில் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமாகியது.

அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள திறனாய்வு விழாவில் -

வைகறை, கரிதாஸ், திருக்குடும்பம், ஒரேப், சுபாஸ், பைநதழிழ், ஐயனார் ஆகிய முன்பள்ளிகளைச் சேர்ந்த சிறுவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (108)



மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம்.ஜி. எழுதிய "அந்த ஒரு உயிர்தானா உயிர்" நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் மட்டக்களப்பில் இடம்பெற்றபோது - நூலாசிரியர் எஸ்.எம்.கோபாலரத்தினம் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் இ.மௌனகுருவிடமிருந்து பத்திரிகையாளர் சலீம் முதற்பிரதி பெறுவதையும் படங்களில் காணலாம்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### அரசர்கேணியில் பாடசாலை அமைக்க கோரிக்கை

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அரசர்கேணி கிராமத்தில், புதிய பாடசாலை ஒன்றை அமைத்துத்தருமாறு, கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளரிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், பாடசாலை அமைப்பதற்கென 3 ஏக்கர் காணியையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

மேலும் - இவ்விடத்தில், 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 1996 வரை முகாவில் அ.த.க.பாடசாலையும், 1997 தொடக்கம் 2000 வரை இயக்கச்சி அ.த.க பாடசாலையும் இயங்கி வந்ததுடன், தற்போது கிளாலி றோ.க. த.க. பாடசாலை தற்காலிகமாக இயங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது. (122)

### கொழும்பு பல்கலைகழகத்தில் கோஷ்டி மோதல்!

(கொழும்பு)

கொழும்புப் பல்கலைக்கழகத்தில், இரண்டு மாணவர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில், 3 மாணவர்கள் காயமடைந்தனர். காயமடைந்த மாணவர்கள் - கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஒருவருக்கு வெட்டுக்காயம் ஏற்பட்டதால், மோசமான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### சின்னமுத்து தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள, 10 - 15 வயதிற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் சின்னமுத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதனடிப்படையில், மானிப்பாய் பிரதேச மாணவர்களுக்கு - அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதிவரை தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. பாடசாலை செல்லாத 10-15 வயதுடையோர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அல்லது குடும்பநல உத்தியோகத்தருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

## சின்னஞ்சிறு செய்திகள்

### விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள்

'சீடா' திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கான நீர் இறைக்கும் இயந்திரங்கள், தற்போது உடுவில் கமநல சேவை நிலையத்தில் வைத்து வழங்கப்படுகிறது.

அங்கத்தவர்களாக உள்ள விவசாயிகள், சிறுதொகைப் பணத்தை முதலில் செலுத்தி - மிகுதியை மூன்று மாதத்துக்கொரு தடவை என்ற ரீதியில், நான்கு தவணைகளில் செலுத்தி முடிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (101)

### கந்தரோடை ஆலய மஹோற்சவம்

கந்தரோடை, வற்றாக்கைப் பதி ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி திருக்கோயில் வருடாந்த மஹோற்சவம், எதிர்வரும் வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் 4 ஆம் திகதி மாலை சப்பறத் திருவிழாவும், மறுநாள் தேர்த்திருவிழாவும், மறுதினம் தீர்த்தத் திருவிழாவும், 7 ஆம் திகதி திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளது. (101)

### கலைமகள் அணி சம்பியன்

(அரியாலை)

அரியாலை - சனசமூக நிலையம் நடத்திய யாழ்.மாவட்டக் கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் - அரியாலை சனசமூக நிலைய அணியும், அரியாலை ஸ்ரீ கலைமகள் அணியும் மோதின. இதில், அரியாலை ஸ்ரீ கலைமகள் அணி வெற்றி பெற்றது. (55)

### நிவாரணப் பொருட்கள் விநியோகம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க பளை கிளையினரால், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் - யுத்தத்தால் பாரிய அழிவைச் சந்தித்த பளை, மாசார் பகுதிகளில் மீள்குடியேறியுள்ள 100 இந்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன.

# சுதந்திரத் தேர்தல் ஆணைக்குழு நியமனம்; அரசியலமைப்பு சபை - ஜனாதிபதி இழுபறி!

சுதந்திரத் தேர்தல் ஆணைக்குழு ஒன்றை நியமிப்பது குறித்து, ஜனாதிபதிக்கும் - அரசியலமைப்புச் சபைக்கும் இடையில் இழுபறி ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ள, ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ரஞ்சித் தீரரட்ணவைத் தெரிவுசெய்தது தொடர்பாக - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதிருப்தி வெளியிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியலமைப்புக் குழு, ஐந்து பேரின் பெயர்களை தேர்தல் ஆணைக்குழுவுக்காகச் சிபார்சு செய்திருந்தது. ஆனால், இந்தப் பட்டியலை மீள்பரிசீலனை செய்யும்படி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசியலமைப்புச் சபைக்குத் தெரிவித்தார்.

ஆனால், அரசியலமைப்புச் சபை - இந்தப் பட்டியலில் எந்த மாற்றத்தையும் செய்யாமல், அதே பட்டியலை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு திருப்பி அனுப்பியுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவராகச் சிபார்சு செய்யப்பட்டுள்ள ஓய்வுபெற்ற நீதியரசர் ரஞ்சித் தீரரட்ண குறித்து, ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடே, இக்குழு அமைக்கப்படுவதற்குக் காலதாமதம் என்று கூறப்படுகிறது.

# விடுதலைப் புலிகளின் தலைமை சமாதான முயற்சிகளில் உறுதி!

## தனியார் தொலைக்காட்சிக்கு புலித்தேவன் பேட்டி

புலிகளும், புலிகளின் தலைமையும் சமாதான முயற்சிகளில் மிக உறுதியாக இருப்பதாக - விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் - கொழும்பு தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பொ.ஐ.முவுடன் புலிகள் பேச்சு நடத்தியதாக வெளியான செய்திகள் தவறானவை. யார் இந்தக் கதையைத் தொடக்கி வைத்தார்கள் என்பது தெரியவில்லை. ஆனால, இது உண்மைக்கு மாறான தகவல்.

பொ.ஐ.முவுடன் எந்தத் தொடர்புகளையும் வைப்பதில்லை என்று - அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும், அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் ஏற்கனவே தெரிவித்துவிட்டனர் என புலித்தேவன் மேலும் குறிப்பிட்டார்.

# அமெரிக்க அதிகாரிகளுடன் மிலிந்த பலசுற்றுப் பேச்சு!

அமெரிக்காவுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள - பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான, கைத்தொழில் அமைச்சர் மிலிந்த மொறகொட, அங்கு இராஜாங்க அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்திவருகின்றார்.

செப்ரெம்பர் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கவே, அமைச்சர் மிலிந்த மொறகொட அங்கு சென்றிருப்பதாகத் தெரியவருகின்றது.

நாளை மறுநாள்வரை - அமெரிக்காவில் தங்கியிருக்கும் அமைச்சர் மிலிந்த, இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளுடன் மேலும் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தவுள்ளார். இவர் - அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் மற்றும் பல உயரதிகாரிகளையும் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

# சாவகச்சேரி இந்துவில் இரு கணினிகள் திருட்டு

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்களத்துக்குச் சொந்தமான இரண்டு கணினிகள், கடந்த வியாழக்கிழமை திருடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கல்லூரியின் களஞ்சிய அறையை உடைத்தே, இந்த இரு கணினிகளும் திருடப்பட்டுள்ளன. கல்வித் திணைக்களத்துக்கெனச் சொந்தமான கட்டடம் இல்லாத நிலையில் - தனியாருக்குச் சொந்தமான வீடொன்றில் தற்காலிகமாக இயங்கிவருகிறது. இங்கு போதிய வசதிகள் இல்லாத காரணத்தால், இக்கணினிகள் பாடசாலையில் வைக்கப்பட்டிருந்தபோதே இத்திருட்டு இடம்பெற்றுள்ளது. (25)

# பேச்சு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு; சிஹல உறுமய எதிர்ப்புத் தெரிவிப்பு!

## மத்திய குழு உறுப்பினர் கூறுகிறார்

இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தைகள்மூலம் தீர்வுகாண்பது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு, சிஹல உறுமய கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது.

சிஹல உறுமயவின் மத்திய குழு உறுப்பினர் என்.டி.ஜயரத்ன, இது குறித்துத் தகவல் வெளியிட்ட போது,

அரசியல் தீர்வை, அரசாங்கம் முன்வைக்கும்போது - விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் - இராணுவ ரீதியில் புத்துணர்ச்சி பெற்றுள்ளார்கள். இதனால், எதிர்காலத்தில் நாட்டுக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தலை எதிர்நோக்கும் வகையில் - அரசாங்கம் முப்படைகளையும் பலப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

# நவாலியில் டெங்கு நோயாளி; விழிப்புணர்வு பணிகள் ஆரம்பம்!

(உடுவில்)

நவாலிப் பகுதியில் டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், மக்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தில், விழிப்புணர்வுப் படக் காட்சியும், கருத்தரங்கும் நடத்தப்பட்டதுடன் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

மேற்படி பகுதியில், டெங்கு காய்ச்சல் நோயாளி ஒருவர் இனங் காணப்பட்டதை அடுத்தே, அப்பகுதி பொது சுகாதார பரிசோதகர் இந் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது (101)

# மின்சாரவசதி வழங்கப்படாததால் அரியாலைப்பகுதி மக்கள் விசனம்

(அரியாலை)

அரியாலை பொன்னம்பலம் வீதி, முள்ளி, நாவலடி ஆகிய பகுதிகளில்- இதுவரை மின்சாரவசதி ஏற்படுத்திக்கொடுக்கப்படததால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

கடந்த 2000ஆம் ஆண்டு இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் மின்சார விநியோகம் தடைப்பட்டிருந்த மேற்படி பகுதிகளில், மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விட்டிருந்தும், இதுவரை. பலன் கிடைக்காததால் இது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வீதியோரங்களை அண்டிய பகுதிகளில் பற்றைகள் வளர்ந்து காணப்படுவதாலும், மிதிவெடி அபாயம் இருப்பதாலும் இப்பகுதியில் தெருமின் விளக்குகளும் பொருத்தப்பட வேண்டிய அவசியம் இருப்பதாகவும் மேலும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (55)

## தவறவிட்ட அடையாள அட்டைகள் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பு

பொதுமக்களால் தவறவிடப்பட்ட ஒரு தொகுதி அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு யாழ்.பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் பொலிஸ் நிலையத்தின் சிறுகுற்றப் பிரிவுக்குச் சமூகமளித்து, உறுதிப்படுத்தி, அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகளுக்குரியவர்களின் விபரம் வருமாறு-

குமரேசு பொன்னையா கனகலிங்கம் (சீனிவாசகம் வீதி, கொட்டடி யாழ்ப்பாணம்), சிவஞானம் தனலக்சுமி (வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்), கந்தையா சந்திரசேகரம் (பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்), தர்மலிங்கம் ரத்தினராசா (புங்குடுதீவு மேற்கு), பொன்னையா கசிதா (8ஆம் யுனிற், தர்மபுரம் கிழக்கு, கிளிநொச்சி), சிற்றம்பலம் நல்லம்மா (சாந்ததோட்டம் புலோலி, பருத்தித்துறை), சின்னத்தம்பி சுதாகரன் (ஓட்டுமடம் யாழ்ப்பாணம்), விஸ்வநாதன் தணிகாசலம் (சிவன்கோவிலடி, புத்தூர் மேற்கு, யாழ்ப்பாணம்), அருளம்பலம் சிவபாதம் (மணற்பிட்டி, காரைநகர்), தர்மலிங்கம் ரவீந்திரன் (புனித செபஸ்தியார் வீதி, கோண்டாவில்), சீவரத்தினம் மணிபல்லவன் (ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்).

## இளைஞர் குழுக்கள் அட்டகாசம்

நல்லூர் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள பகுதியில் - தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவிகள் மற்றும் பெண்களுடன், இளைஞர் குழுக்கள் சேஷ்டை புரிந்து அட்டகாசம் செய்வதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மாணவிகளுடன் சேஷ்டை விடும் இளைஞர் குழுக்களைத் தட்டிக் கேட்கும் வயோதிபர்களை கெட்ட வார்த்தைகளால் இவர்கள் திட்டித் தீர்ப்பதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (61)

## அரியாலைப் பகுதியில்

# சட்டவிரோத மண் அகழ்வினால் கோயில் இடிந்து விழும் நிலையில்!

(அரியாலை)

அரியாலை பொன்னம்பலம் வீதியை அண்டியுள்ள பகுதிகளில் தொடர்ந்தும் சட்டவிரோதமாக மண் அகழப்படுவதால், அப்பகுதியிலுள்ள அம்மன் கோயில் கட்டடம் இடியும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது என, அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இரவோடு இரவாக இப்பகுதியில் உழவு இயந்திரங்களில் வந்து, மண் மிக ஆழமாக வெட்டப்படுகிறது. இதனால் கோயில் அத்திவாரத்தின் அடிப்பகுதி வெளித்தெரியத் தொடங்கியுள்ளதால், இடிந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் - சில பகுதிகளில் ஐந்து அடி ஆழத்திற்கு மேலாகவும், மிக விசாலமாக மண் அகன்றெடுக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி வீதியில் உள்ள இராணுவ முகாமைத் தாண்டியே, இரவோடு இரவாக மண் அகழப்படுவதால் படையினரின் ஒத்துழைப்பும் இவர்களுக்கு இருக்கலாம் என மக்கள் ஐயம் தெரிவிக்கின்றனர். (55)

## கிளிநொச்சி நகரப் பகுதியில்

# வீதியோரத்திலுள்ள கட்டடங்களை அப்புறப்படுத்துமாறு உத்தரவு!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்துக்கமைய, ஏ-9 வீதி மற்றும் நகரசுற்றுவட்ட வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்துக்கு முன்னோடியாக-கிளிநொச்சி நகரப் பகுதியில், ஏ-9 வீதியின் இருமருங்கிலும் உள்ள கடைகளை, நகர அபிவிருத்திக் கட்டளைக்கு அமைவாக, அறுபதடிக்கு அப்பால் அகற்றுமாறு கரைச்சி பிரதேசசபையின் விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் உத்தரவிட்டுள்ளார்.

ஒருவாரத்துக்குள் குறித்த கட்டடங்கள் அனைத்தும் அப்புறப்படுத்தப்பட வேண்டுமென்றும், காலக்கெடு விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கட்டடங்களை அகற்றுவதற்குத் தமக்கு போதிய அவகாசம் தரப்படவேண்டும் என்று வர்த்தகர்கள், அதிகாரிகளைக் கேட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

# சின்னஞ்சிறு செய்திகள்

### நாகதம்பிரான் பொங்கல் விழா

கிளிநொச்சி - செல்வநகர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா இன்று இடம்பெறவுள்ளது.

மேற்படி பொங்கல் விழாவில் கரகாட்டம், தீமிதிப்பு, பஜனை நிகழ்வு என்பவற்றோடு, கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (55)

### 250 குடும்பங்களுக்கு பளையில் நிவாரண வெட்டு

(பளை)

அண்மைக்கால புதிய நிவாரண வெட்டுத் திட்டத்தினால் பளைப் பிரதேசத்தில் 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள், தமது நிவாரணத்தை இழந்துள்ளன.

மாதாந்தம் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்பட்ட வருமானத்தைக் கொண்ட குடும்பங்கள், நிவாரணத்தைப் பெறத் தகுதியற்றதாகக் கணிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இயங்காத வாகனம் வைத்திருப்போரும், சிறுகடை வைத்திருப்போரும் நிவாரணத்தை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மீண்டும் பழைய இடத்தில் இயங்கும் சனசமூக நிலையம்

பளைப்பிரதேசத்தில் உள்ள பேராலை கலைவாணி சனசமூக நிலையம், கடந்த 12 வருடங்களின் பினனர், சென்ற வியாழக்கிழமை முதல் சொந்த இடத்தில் இயங்கிவருகின்றது.

புனரமைக்கப்பட்ட இச்சனசமூக நிலையத்தின் திறப்பு விழா நிகழ்வு, நிலையத்தின் தலைவர் ம.வேலுப்பிள்ளை தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

பச்சிளைப்பள்ளி பிரதேச சபையினைச் சேர்ந்த முரளிதரன் நாடா வெட்டித் திறந்து வைத்தார். (122)

### ஆவரங்கால் அணி வெற்றி

(அரியாலை)

அரியாலை சனசமூக நிலையம் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில், ஆவரங்கால் இந்து இளைஞர் கழக அணி, கே.கே.எஸ். அணியை வென்று முதலாமிடத்தைப்பெற்றது. (55)

### வலி.தெற்கு பிரதேச முத்தமிழ் விழா

வலி.தெற்கு பிரதேச செயலகத்தின் கலாசாரக் குழுவினரால், அடுத்த மாதத்தில் முத்தமிழ் விழா நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள இயல், இசை, நாடகக் கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக, இவ்விழா இடம்பெறவுள்ளது. சம்பந்தப்பட்ட கலைஞர்கள் வலி.தெற்கு கலாசார உத்தியோகத்தரிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

### மகாஜனாவில் பரிசளிப்பு விழா

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் நிறுவுனர் தினமும், பரிசளிப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் குமாரவடிவேல் கலந்து கொள்வார். நினைவுப் பேருரையை மனோ சிறிதரன் நிகழ்த்துவார்.

### பூங்காவன மண்டபம் புனரமைப்பு

தொண்டமானாறு - செல்வசந்நிதி ஆலய பூங்காவன மண்டபம், இந்து சமய அமைச்சின் நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. முன்னர் இருந்ததைவிட இந்த மண்டபம் பெரிதாக அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(76)

### கிராம அலுவலர்களுக்கான கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராம அலுவலர்களுக்கான விசேட கூட்டமொன்று, இன்று பிற்பகல் 2 மணிக்கு செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், சகல கிராம அலுவலர்களையும் கலந்துகொள்ளுமாறு பிரதேசசெயலர் கே.கேதீஸவரன் கேட்டுள்ளார். (25)

### மதிலுடன் வான் மோதியதில் சாரதி படுகாயம்

(சங்கானை)

சங்கானையில் ஹையேஸ் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில், அதன் சாரதி படுகாயமடைந்து, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இச்சம்பவத்தில், கந்தையா விஜயகுமார் (வயது 30) என்பவரே படுகாயமடைந்து, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

இவரது ஹையேஸ் வானின் 'றொட்' உடைந்ததாலேயே, வான் வீதியோரத்திலுள்ள மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது என்பது குறிப்பிடத்தக்கது.

### 284 பாடசாலைகளுக்கு மலசலகூட வசதி

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு, சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு, இதுவரை 284 பாடசாலைகளுக்கு மலசலகூடங்களை அமைத்துக் கொடுத்துள்ளதாக ஜி.ரி.இசற் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வருடம் மேலும் 42 பாடசாலைகளுக்குச் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளதாகவும் இந் நிறுவனத்தினர் தெரிவித்தனர். (122)


## வாழ்க வளமுடன்



HAPPY BIRTHDAY

### இரண்டாவது அகவையில்



பெயர் : ச.ஹெரினா
முகவரி : தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

### ஐந்தாவது அகவையில்



பெயர் : சி.மதுமிதா
முகவரி : இளவேனில், அல்வாய்.

### ஏழாவது அகவையில்



பெயர் : பி.பிரவிந்த
முகவரி : அரசடி வீதி, சங்கானை.

### ஒன்பதாவது அகவையில்



பெயர் : ச.பிரசாந்
முகவரி : நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:----------------------------------------
முகவரி :----------------------------------------
பிறந்த ஆண்டு:----------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைச்

--------------------
பெற்றார் ஒப்ப..

# தீர்வுகள் கிடைக்குமா?

**சந்திரவதனா செல்வகுமாரன் (ஜேர்மனி)**

வீட்டுக்குள் நுழைந்தபோது வழமையாக கணினிக்கு முன்னால் உட்கார்ந்து இன்ரநெட்டில் உலகம் முழுவதும் சட்டன் செய்யும் என் கடைக்குட்டி வரவேற்பறையில் **Tokiyo** 2002 (உலக வெற்றிக் கிண்ண கால் பந்துப் போட்டி) பார்த்துக் கொண்டிருந்தான். நான் வந்ததே தெரியாத அளவுக்கு விளையாட்டு வீரர்களிலும் அவர்களிடம் உதைபடும் பந்திடமும் தன்னை மறந்து ஊன்றிப் போயிருந்தான்.

அவனுக்கருகில் இருந்து **Tokiyo** 2002 ஐப் பார்த்துக் கொண்டிருந்த என் கணவர் மட்டும் திரும்பி கேள்விக்குறியுடன் என்னைப் பார்த்தார்.

- என்ன வேலை முடிஞ்சு வழக்கம் 8.10 க்கே வாறனீர்..? இண்டைக்கென்ன..? அதுவும் இந்த இரவு நேரம் 9 மணி தாண்டி வருகிறீர்..! - என்பதுபோல் இருந்தது அவரின் பார்வை.

நான் மெல்லிய சிரிப்பை மட்டும் உதிர்த்து விட்டு நேரே எனது அறையுள் போய் உடைகளை மாற்றி குளியலறைக்குள் புகுந்து கொண்டேன். தண்ணீரை அளவான சூட்டில் விட்டு சவரைப் பிடித்த போது உடம்புக்கு இதமாக இருந்தது. ஆனாலும், மனதுக்குள் இன்னும் புழுக்கமாகவே இருந்தது.

நான் வேலை முடிந்து என் சக வேலையாட்களுடன் பேருந்துக்காக விரைந்தபோது, எனது ஸ்வெபிஸ்ஹால் நகரம் கோடைகாலத்துக்கே உரிய கலகலப்புடன் தெரிந்தது. ஆங்காங்கு உணவுச்சாலைகளின் முன்பும், சிற்றுண்டிச்சாலைகளின் முன்பும், ஐஸ்கிரீம் கடைகளின் முன்புமாக பெரியவர்கள், சிறியவர்கள், காதலர்கள், நண்பர்கள் என கும்பல் கும்பலாக இருந்து எதையாவது சுவைப்பதுவும், கதைப்பதுவும் சிரிப்பதுவுமாக இருந்தார்கள்.

வீதிகள் கண் பார்த்துக் கதை பேசும், உதட்டோடு உதடுரசும், இடைவளைத்து உடல் உரசித் தமைமறந்து செல்லும் ஜோடிகளும், ஆங்காங்கு சிறுவர்கள் சிறுமியர்களும் என்று நிறைந்திருந்தது.

விருட்சமாக விரிந்திருந்த கஸ்தானியன் மரங்களில் வெள்ளைப் பூக்கள் கொத்தாகப் பூத்திருந்தன. இன்னும் ஒரு மாதத்தில் கஸ்தானியன் காய்கள் காய்த்து விடும்.

வீதியோரங்களில் சிவப்பாய், வெள்ளையாய், மஞ்சளாய்.. என்று பல வர்ணங்களில் மலர்கள் சிரிக்க, இதமான காற்று உடலை வருட.. - வேலை முடிந்து விட்டது. இனி வீட்டுக்குத்தானே..! - என்ற திருப்தியில் நடக்கையில் சந்தோசமாக இருந்தது. கதையும் பகிடியும் சிரிப்புமாக வந்த நானும் என் சக வேலையாட்களும் பேருந்துத் தரிப்பு நிலையத்துக்கு அருகில் வந்ததும் பிரிந்து எமக்கெமக்கான பேருந்துகளை நோக்கி நடந்தோம்.

மைக்கல் தேவாலய மணிக்கூடு எட்டுமுறை அடித்து ஓய்ந்தது. பக்கத்திலிருந்த பெயர் தெரியாத மரத்தின் வெள்ளைப் பூக்கள் என்னை ஈர்த்தன. அந்தப் பூக்களில் லயித்துப் போய் நின்ற என் மனதையும், கண்களையும் வலுக்கட்டாயமாக பேருந்தின் பக்கம் திருப்பி பேருந்தில் ஏற முற்பட்ட போதுதான்..... பேருந்து நிலையத்துக்கு அருகில் வீதியோரமாக இருந்த மர வாங்கிலில் மல்லாக்காகப் படுத்திருந்த அவன் என் கண்ணில் பட்டான். அவன் படுத்திருந்த விதம் வித்தியாசமாகவே இருந்தது.



அவன் வேறு யாருமல்ல. எனது நாட்டவன். எனக்கு என்ன செய்வதென்று தெரியாத தடுமாற்றமாய் இருந்தது. சொற்ப விநாடிகளில் எனது பேருந்து புறப்படப்போகிறது. என்ன செய்வது..? எனது நாட்டவன் ஒருவன் அப்படியிருக்க பாராமுகமாய் சென்றுவிடவும் மனசு ஒப்புக் கொள்ளவில்லை.

என்ன பிரச்சனையாக இருக்கும்..? அவன் போக வேண்டிய இடத்துக்கான பேருந்து வந்திருந்தும் அவன் அதைப் பொருட்படுத்தாது ஏன் அப்படி...? ஏதாவது சுகவீனமோ..? எனக்குள் குழப்பமான கேள்விகள் எழுந்தன.

என்னைச் சட்டை செய்யாது எனது பேருந்து புறப்பட்டு விட்டது. சற்று நேரத்துக்கு முன்னர் இருந்த சந்தோசத்தில் ஏதோ குறைந்து விட்டது போலிருந்தது. நான் அந்த வாங்கிலை நோக்கி நகர்ந்தேன். அருகில் சென்றதும் அவன் என்னைக் கண்டு திடுக்கிட்டு தட்டுத் தடுமாறி எழும்பினான். கையில் இருந்த பியர் பேணியை அவசரமாய் பின்பக்கம் மறைத்தான். அக்கா....! என்று சங்கடப்பட்டான்.

எனக்கு அவனது கோலம் ஆச்சரியமாகவும் நம்பமுடியாததாகவும் இருந்தது. பத்து வருடங்களாக நான் வாழும் இந்த ஸ்வெபிஸ்ஹால் நகரில் என்னையும் என் கணவரையும் எனது பிள்ளைகளையும் விட்டால் மருந்துக்குக்கூட வேறு தமிழர்களே இருக்கவில்லை. இரண்டு வருடங்களின் முன்பு தான் 1989 வரை அமெரிக்க இராணுவத்தினரின் முகாமாக இருந்த டோலன்பறக்ஸ், அகதிகள் முகாமாக்கப்பட்டு அங்கு பல்வேறு நாட்டு அகதிகளோடு நாற்பது தமிழர்களும் குடியமர்த்தப்பட்டனர். அவர்களுள் இப்போ என் முன்னால் பியர் பேணியோடு நிற்கும் கோபுவும் ஒருவன்.

எமது நகரத் தினசரிப் பத்திரிகையொன்றில் நாற்பது தமிழர்களின் வரவு செய்தியாக வந்த போது - எமது நகரில் தமிழரா..! - என்று மனசு சந்தோசத்தில் துள்ள குடும்பமாகச் சென்று அவர்களைச் சந்தித்தோம். கோபுவையும் அன்றுதான் முதன் முதலாகச் சந்தித்தோம். மிகவும் அடக்கமானவனாகக் காணப்பட்டான். அவன் தாயகத்திலிருந்து புறப்பட்டதிலிருந்து பாங்கொக், உக்ரையின் என்று ஏஜென்சியால் அலைக்கப்பட்டு உக்ரையின் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு.. சில வருடங்களோடு தனது வாழ்க்கையின் சில வசந்தப் பொழுதுகளையும் தொலைத்திருந்தான். அவனிடம் மட்டுமல்ல. வந்திருந்த நாற்

## சிறுகதை

பது பேரிடமும் விரக்தியான சோகமான உண்மைக் கதைகள் பல இருந்தன. அவர்களுக்குள் இவன், படித்த பண்பான குடும்பத்தில் இருந்து வந்த ஒருவனாகவே தெரிந்தான். தந்தை பாடசாலை அதிபர் என்றான்.

அவனைப் பின்பும் பலமுறை சந்தித்திருக்கிறேன். ஓரளவு தேறியிருந்தான். பொறுப்புள்ளவனாக ஊர்க்கனவுகளைச் சுமந்தவனாக வேலை தேடிக்கொண்டிருந்தான்.

சில மாதங்களின் பின், மீண்டும் ஒரு முறை சந்தித்தபோது- பிற்சாக் கடை ஒன்றில் நிலத்தைக் கழுவிக் கொண்டிருந்தான். என்னைக் கண்டபோது வெட்கப்பட்டு ஒளித்தான்.- இதிலை ஒண்டும் வெட்கமில்லை. அடுத்தவன் கையை எதிர்பார்க்காமல் அடுத்தவனை ஏமாற்றாமல்.. யாருக்கும் தீங்கு விளைவிக்காத.. உங்களாலை முடிஞ்ச வேலையை நீங்களே செய்து பணம் சம்பாதிக்கிறது ஒண்டும் வெட்கமான விசயமில்லை.- என்றேன். அதன் பின்னர் - அவன் நிலம் கழுவிக் கொண்டிருக்கும்போது என்னைக் கண்டாலும் கூச்சப்படாமல் - அக்கா- என்று கூப்பிட்டு வணக்கம் சொல்லுவான்.

அப்படிப் பண்போடும் மரியாதையோடும் பழகும் அடக்கமான பொறுப்பான கோபுவைத் தான் எனக்குத் தெரியும். இன்று இப்படி குடிபோதையில் தோய்ந்து போயிருந்த கோபு எனக்கு முற்றிலும் புதியவன்.- என்ன கோபு..? ஏன் இன்னும் வீட்டை போகேல்லை. உங்கடை பஸ்ஸில்லோ வெளிக்கிடப் போகுது..?

இல்லை.. அக்கா.. போப்போறன்.. என்று தடுமாறியவன்- நீங்கள் போங்கோ அக்கா நான் அடுத்த பஸ்ஸிலை போறன்.- என்றான்.

- இல்லை.. மினக்கடாமல் இப்பவே ஓடிப் போய் அந்த பஸ்ஸிலை ஏறி வீட்டை போய்ச் சேருங்கோ.. - என்றேன்.

அவன் எனக்குத் தெரியக்கூடாது என்ற பிரயத்தனத்துடன் கையில் இருந்த பியர் பேணியை மெதுவாக அவனகில் நாட்டப்பட்டிருந்த குப்பை வாளியினுள் போட்டான். நான் கண்டும் காணாத மாதிரி நின்றேன். அதற்கிடையில் அவனது பேருந்தும் போய்விட்டது.

- பார்த்திங்களே இப்ப பஸ்ஸை விட்டிட்டிங்கள். -

- வீட்டை போயும் என்னத்தைச் செய்யிறதக்கா..? -

- இந்த ரோட்டிலை நிண்டு மட்டும் என்ன செய்யப் போறிங் கள்..? நாளைக்கு வேலையில்லையோ..?-

- இல்லை நான் வேலையை விட்டிட்டன்.-

- ஏன்..? அப்ப காசுக்கு என்ன செய்யிறிங்கள்..? அம்மாக்கு காசு அனுப்பின்னிங்களே..? அக்கான்ரை தாலிக் கொடியை அத்தானுக்கும் தெரியாமல் அடைவு வைச்சில்லே உங்களை இங்கை அனுப்பினவையள. மறந்திட்டிங்களோ..?-

அவன் தள்ளாடியபடி மௌனமாய் நின்றான்.

நான் மேற்கொண்டு எதுவும் கேளாது அவனை ஒரு ரக்சியில் ஏற்றி அவனது வீட்டுக்கு அனுப்பிவைத்தேன். இரவு நேரமாதலால் ஒரு மணி நேரங்கழித்தே எனது அடுத்த பேருந்து வந்தது. வழியெல்லாம் ஏன் இவன் இப்படியானான்..? என்ற கேள்வி என்னைக் குடைந்து கொண்டேயிருந்தது. அவன் மீது கோபமாகக்கூட இருந்தது. பேருந்து தரிப்பு நிலையத்தில் எத்தனை பேர் பார்த்துக் கொண்டு நின்றார்கள். எல்லாருக்கும் அவன் எனது நாட்டவன் என்பது புரிந்திருக்கும். அவமானம் அவனுக்கு மட்டுமா? அல்லது, அவனுக்கும் எனக்கும் மட்டுமா? எங்கள் நாட்டுக்கும் அல்லவா..! தமிழரையே கேவலமாக நினைப்பார்களல்லவா..! ஏன் இப்படி எம்வர்கள் மாறிப் போகிறார்கள் என்று யோசித்ததில் எனக்கு எரிச்சலாகவும் மனசுக்குள் புகைச்சலாகவும் இருந்தது.

வெளிநாட்டுக்கு வந்து எமது இளையவர்கள் கெட்டுப் போகிறார்கள் என்ற சிலரின் வாய்ப்பாட்டை உண்மையாக்குவது போலல்லவா இவன் நடந்து கொண்டிருக்கிறான்.

குளித்து முடித்து வெளியில் வந்தபோது காற்பந்து மிகவும் சுவாரஸ்யமாகப் போய்க் கொண்டிருந்தது. தேநீர் தயாரித்து கணவருக்குக் கொடுத்தபோது, கண்களை தொலைக்காட்சியில் இருந்து விலத்தாமலே தேநீரை வாங்கிச் சுவைக்கத் தொடங்கினார்.

கோபு ஒழுங்காக வீடு போய்ச் சேர்ந்துவிட்டானா என்பதை அறிந்து கொள்வதற்காக, நான் எனது தேநீரை உறிஞ்சியபடி தொலைபேசியில் கோபுவின் வீட்டு இலக்கத்தை அழுத்தினேன். அவனோடு கூட வாழும் அவனது நண்பன்தான் அழைப்பில் வந்தான். - கோபு வாந்தி எடுத்துவிட்டு படுத்துவிட்டான். - என்றான்.

அவனிடம் கோபுவைப் பற்றி விசாரித்தபோது, முதலில் சங்கடப்பட்டு எதையும் சொல்லாது மழுப்பியவன் பின்னர் சொல்லத்தொடங்கினான் - என்னத்தைச் சொல்லுறது அக்கா...! இவனுக்கு அங்கை ஊரிலை ஒரு காதலி இருக்கிறாள். அவளை இங்கை வந்த உடனை கூப்பிடுறதாச் சொல்லிப்போட்டுத்தான் இவன், இங்கை ஜேர்மனிக்கு வந்தவனாம். பாங்கொக், மொஸ்கோ எண்டு அலைஞ்சதிலை அங்கை அவளுக்கு ஒழுங்கா கடிதமொண்டும் போகேல்லை. பிறகு இரண்டு வருசம் உக்ரையினிலை ஜெயில்லை இருந்த விசயம் உங்களுக்குத் தெரியும் தானே. அந்த நேரம் இவனைப் பற்றி ஒரு தகவலும் அங்கை ஒருத்தருக்கும் கிடைக்கேல்லை. அவன் ஒரே அவளின்ரை நினைவாத்தான் இருந்தவன். ஆனாலும் அவள் இவனை நம்புகிறாளில்லை. அவள் நினைச்சிட்டாள் இவன் இவ்வளவு காலமும் இங்கை ஜேர்மன் காரியோடை சுத்திப்போட்டு இப்ப அலுத்துப்போக தனக்கு ரெலிபோன் அடிக்கிறான் எண்டு. இவன் ரெலிபோன் அடிச்சாலே - வையடா ரெலிபோனை.. - எண்ட பதில்தான் வருது.

நானும் இவனுக்காண்டி அவளோடை கதைச்சுப் பார்த்தன். ம்கும்... சரிவரேல்லை. இவனுக்கு தொலைபேசிக் கட்டணம் தலைக்கு மேலே வந்ததுதான் மிச்சம்.

இப்ப இங்கையிருந்து காட் கிடைச்ச வேறை ஒருவன் அங்கை போய் அவனுக்கும் அவளுக்கும் கல்யாணம் நிச்சயமாகிட்டுதாம். அந்த விரக்தியிலைதான் இவன் இப்படியாப் போனான்.....

எனக்கு கோபுவின் நிலை புரிந்தது. ஆனால் புலம் பெயர்ந்தவர்களின் இப்படியான அவலங்களை தாயக உறவுகளுக்கு எப்படிப் புரிய வைக்கலாம் என்பதுதான் புரியாமல் இருந்தது.

➤

## இலக்கியச்சோலை

## நூல் அகம்



பாஷையூரில் நாட்டுக்கூத்தில் ஈடுபாடு கொண்ட கலைஞர்களையும், அவர்களால் ஆற்றப்பட்ட நாட்டுக் கூத்துக்கள் பற்றிய விபரங்களையும் மு.சிங்கராயர் 'கூவிப் பறந்த கோகிலங்கள்' என்ற நூலில் வெளிப் படுத்தியுள்ளார்.

முத்பத்தொரு வருட காலம் ஆசிரியராகப் பணிபுரிந்தும், பல பத்திரிகைகளில் ஆக்கங்ளை எழுதிய அனுபவ முதிர்ச்சியினால், ஏற்கனவே மூன்று நூல்களைப் படைத்துள்ளார். இது இவரது நான்காவது நூலாகும்.

செஞ்சொற்கவி க.மு.சுவாம்பிள்ளை, மதுரகவி மிக்கோர்சிங்கம், இன்சுவைக் கவிமணி பெஞ்சமின் கிறிஸ்தோப்பர் ஆகிய மூன்று கலைஞர்களுடைய இலக்கிய ஆக்கங்களை ஆசிரியர்களின் வரலாற்றுப் பின்னணியில் நோக்கி, விளக்கிச் சொல்கிறார் என இந்த நூலுக்கு அணிந்துரை எழுதிய பேராசிரியர் அ.சண்முகதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலில் முதலில் செஞ்சொற்கவி க.மு.சுவாம் பிள்ளையின் வரலாற்றையும், அவரது கூத்துக்களின் சிறப்புக்களையும் பற்றி எடுத்துரைக்கின்றார்.

காத்திரமான ஒரு பங்களிப்பை கூத்துக் கலைக் கென்றே ஆற்றிய மூத்த புதல்வன் சுவாம்பிள்ளையை, காலம் நம்மிடம் இருந்து பறித்து விட்டது என்று, ஆழ்ந்த கவலையோடு எடுத்தியம்பி இருக்கிறார்.

அடுத்ததாக- மதுரகவி. நீ.மிக்கோர் சிங்கத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் காலத்தால் மரணிக்காத சந்த நயமும், இவர் பாடல்களில் இழையோடி நிற்பதோடு, கவிதை என்பது மனித உணர்ச்சியின் பிரவாகம் என்ற உண்மையை இவர்களின் ஆக்கங்களைப் படிப்பவர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியும். இவரது உணர்வு நிலையின் பிரசவங்கள் பல. அவை மனித நெஞ்சங்களை பிரமிக்க வைக்கக் கூடியன என்று இந்தக் கலைஞரால் ஆற்றப்பட்ட கூத்துக்கள் பற்றி சிலாகித்துக் குறிப்பிட்டுள்ளார் நூலாசிரியர்.

இன்சுவைக் கவிமணி பெஞ்சமின் என்பவர் பற்றிக் குறிப்பிடுகையில், கூத்தின்மேல் மேற்கொண்ட தணியாத வேட்கையாலும், கொழுந்து விட்டெரிந்த தன் பொன்னான பூட்கையாலும் தனி மனித நிறுவனமாய் நின்று, கூத்துத் தமிழுக்குத் தொண்டு செய்தவன் என்று புகழ்ந்து கூறுகின்றார்.

எனினும் - நூலாசிரியரின் அடி மனதில் பாஷையூர் கண்ட கூத்துக்கள், எல்லாம் காலத்தால் அழிந் தொழிந்துவிடுமோ என்ற அச்ச உணர்வில்தான் இந்த நூலை வெளியிட்டுள்ளார் என அவரது 'தலைவாசல் திறக்கு முன்' என்ற பகுதி மூலம் தெரியவந்துள்ளது.

**- மணிசேகரன்**

# கிழக்கும் மேற்கும்

## மாமன்னன் அரிச்சந்திரன் - இறையன்பன் யோபு



காவலர் அவளைக்கொல்லக்
கொலைக்களம் இழுத்துச் சென்றார்!
காவலர் இழுத்து வந்த
பெண்ணினைக்கண்ட சுடலைக்
காவலன் "தகனக்கூலி
இன்றித்தன் மகனைத் தனது
காவலை மீறித் தகனம்
செய்திட வந்தவள் இவளோ"
என்றுள்ளம் தெளிந்தபோது
"இவளது உயிரைக் கொல்/ள்வாய்!
மன்னனின் ஆணை" என்றார்!
காவலன் அவளைப் பார்த்து
"நங்கையே! உனக்கு இந்தக்
கேடு ஏன் வந்த" தென்றான்!
நங்கையும் தனக்கு நேர்ந்த
கதியினை உரைக்கக் கேட்டுக்
காவலன் பெண்ணை நன்கு
நோக்கியபோது; மண்ணில்
கணவனை யன்றி மாற்றார்
பார்வைக்குத் தோற்றாத் தாலி
கழுத்திலே மிளிரக் கண்டு
"தன்துணை இவளே" என்று
தெளிந்ததும் தன்னைப் பற்றி
அவளுக்கு விளக்கிச் சொன்னான்!
தெளிவுற்ற இரண்டு பேரும்
இறந்ததம் மகனைப்பார்த்துத்
துயரத்தால் உள்ளம் நொந்து
"வாய்மைக்காம் எமது பேரில்
உயர்ந்த எம் மகனைத் தந்தோம்!
இழப்பதற் கினியொன்றில்லை"
என்றுள்ளம் தெளிந்து கொண்டு
"மன்னனின் ஆணை ஏற்று
என்பணி செய்வேன்" என்று
கொலை வாளை உயர்த்தும் வேளை-
"ஐயனே! அரசன் ஆணை
முடிப்பதுன் கடனே" என்று
கைகளைக் கூப்பி நங்கை
சிரம்தாழ்த்தி நின்றவேளை -
"அவசரம் வேண்டாம் சற்றே
பொறுபொறு" என்ற வண்ணம்
அவலத்துக் கெல்லாம் மூல
காரணர் என்று சொல்லும்
மாமுனி விசுவா மித்திரர்
அவர்கள் முன் வந்து நின்றார்.

முருகு

(தொடரும்..)

# இதில் எந்த ரகம் நீ..?!!

சூரிய அஸ்த்தமனத்தால்
என் பின்னே ஓடிமறையும்
எனது நிழல்.

கடற்கரை மணலில்
தாளமிட்டு
நடைபயின்ற
என் பாதச்சுவடுகளின் ஆழத்தை
கரைத்துப்போகும் கடல் அலை



பூத்து குலுங்கி
காய்த்து கனிந்த மரங்களை
மொட்டையாக்கிப்போகும்
பனிக்காலம்.

கலக்கமில்லா
நீர்த்தடாகத்துள்
வானத்து முகில்களை
பறக்கும் பறவைகளை
ரசித்தஎன் விழிகளை
கலைத்துப்போகும்
தடாகத்து மீன்

இப்படியா உனதான நட்பும்...?
இல்லை.....

மெல்லிதாய் என் மேனி தடவி
என்னை சிலிர்க்க வைக்கும்
மலைக்காற்று

பனிப்பாறைகளுக்குள்
உருகி
வழிந்தோடும் நீர் துளி

கற்பாறைகளுக்குள்ளும்
அழகாக
பூத்து நிக்கும்
சின்ன சின்ன மலர்கள்.

ரயில் பயணத்தில்
என் தலைகோதி
எனை தூங்கவைக்கும்
யன்னல் காற்று

உச்சி சூரியனின்
வெப்பம் தாங்காமல்
நிழலுக்கே குடையாகும்
உடல் மனசு

கடற்கரைக்காற்று
குளிர்ச்செய்து விடுமோ என
எனக்கு போர்வை தரும் கரம்.

ஓ.. அப்படியா.!!
வா..!
நமக்கான நட்பை
பூக்கச் செய்து
அழகு பார்ப்போம்:

நளாயினி தாமரைச்செல்வன்

# A-9 னை நீளும் நினைவுகள்

பகுதி முப்பத்தேழு

திருமலைதனிற் கேட்ட சமர்ப்பறை
திசைகள் எட்டுக்குங் காற்றாய்ப் பரவிற்று.
தெருத் தெருவாக யுத்தம் பிறந்தது.
சேர்ந்த இரத்தம் நதியாய்ப் பெருகிற்று.
ஒரு தசாப்தமாய் தத்தித் தவழ்ந்திட்ட
சமர்ப்பரிமாணம்... ஓட்டம் எடுத்தது.
வரவுள துயர் ஏதும் அறியாது...
A-9 தெரு மல்லாந்து தூங்கிற்று.

அடுத்தடுத்து இரண்டு விண் ஊர்திகள்
ஆகாயத்தில் நெருப்புப் பிளம்பாகி
வெடித்துப் பலாலி, நிலாவரை மண்ணிலே
விழுந்தன; நெடுநாளைய கற்பனை
நடந்து முடிந்தது யதார்த்த அரங்கிலே!
நாரி நிமிர்த்தித் திரிந்தனர்... ஊரவர்.
தொடர்ந்து வானத் தொடர்பு அறுந்தது.
சூழ்ந்த மாகடல் தொப்புள் கொடியாச்சு.



கிழக்கின் எல்லையில் கிளம்பிற்று போர்ப்புயல்;
எனினும் வடக்கிற்தான் மையங் கொண்டாடிற்று.
முழக்கச் சங்கொலி கேட்டே அந்நாளிற்கண்
முழித்துச் சூரியன் முகமும் கழுவுவான்.
கிழிந்து பிய்ந்து ஓர் ஏழையைப் போலத்தான்
காற்றுங் கந்தகம் நாறத் திரிந்தது.
அழகிழந்தன ஊர்கள்; அயலெல்லாம் அச்சம் மட்டும்
மகிழ்ந்து திரிந்தது.

ஜெயங்கொண்டான்

# பாலையும் சோலையும்

## கலாநிதி சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்



எத்தகைய அப்பாவி, முட்டாள் நான்!

ஊவாக் கல்லூரியிலே எங்கள் தமிழ்ப் பிரிவுக்குத் தலைவராயிருந்தவரும், சோதிட விற்பன்னரும், வாயாடியுமான வீரகத்தி என்பவர் தமிழ் டிப்ளோமா எழுத்துப் பரீட்சையிலே தேறி, நேர்முகப் பரீட்சைக்கு வந்திருந்தவர்களில் ஒருவர்.

"தமிழ் இலக்கிய வரலாறு" எழுதிய ஆசிரியர்கள் இருவரின் பெயர்களைக் கூறுங்கள்". இது செல்வநாயகம் அவர்களின் கேள்வி.

தமிழ் டிப்ளோமா புகுமுகப் பரீட்சைக்குச் செல்வநாயகத்தின் தமிழ் இலக்கிய வரலாறும் பாடநூலாயிருந்ததால், வீரகத்தி அவரின் பெயரைக் குறித்தார்.

'நல்லது, வேறு ஒருவர் பெயரைக் கூறுங்கள்...' செல்வநாயகம்.

வீரகத்தி சிறிது சிந்தித்த பின். 'வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியார்' என்று கூறினார்.

'சரியாக யோசித்துச் சொல்லுங்கள்'... சூரியநாராயண சாஸ்திரியார் 'தமிழ் இலக்கிய வரலாறு' எழுதினவரா...?

'ஓம் சேர்'.

'நீங்கள் அந்தப் புத்தகத்தைக் கண்டிருக்கிறீர்களா'?

'இதென்ன கேள்வி சேர்' அந்த வரலாற்றை நான் இரண்டு தடவைகளுக்கு மேல் படித்திருக்கிறேன்.'

'ஓ அப்படியா? நான் படிக்கவில்லை. அந்தப் புத்தகத்தை பார்த்திருக்கிறேன். அதன் தலைப்பு 'தமிழ் மொழி வரலாறு' என்று இருக்கவேணும்'

'இல்லை சேர். எனக்கு நிச்சயமாய்த் தெரியும். தமிழ் இலக்கிய வரலாறு சூரியநாராயண சாஸ்திரியார் எழுதியிருக்கிறார்'

வீரகத்தி அவர்களின் வாதமும், அவர் தமிழ் மொழி வரலாற்றைத் 'தமிழ் இலக்கிய வரலாறு' என்று சாதிக்க முற்பட்டதும், தமிழ் டிப்ளோமா பயிற்சி பெறத் தகுதியற்றவராய் அவரை ஆக்கிவிட்டன.

இதன் பின்னவரது வீரகத்தி, யாருடன் எந்நிலையில் எப்படிப் பேசவேண்டும் என்று கற்றிருக்கக்கூடும். இருப்பினும் அமரராகிவிட்ட அவரின் இனிமையான சுபாவமும், கலகலப்பும் உதவி புரியும் மனப்பாங்கும் இன்னும் மனத்திரையில் தவறாது உலா வருகின்றன. நாவலர், இந்து மகாவித்தியாலய அதிபராய் இருந்த காலத்தில் புற்றுநோய் அவரைப் பலிகொண்டது.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலே இரண்டு ஆண்டுகள் தமிழ் டிப்ளோமா (தமிழில் வித்துவான் என்று அழைக்கப்பட்டது) கற்கையில் எங்களுக்கு விரிவுரையாற்றியவர்கள் பின்வருவோர்.

1. பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை - தமிழ் எழுத்து வரலாறு
2. முதல்நிலை விரிவுரையாளர் வி.செல்வநாயகம் - தொல்காப்பியம் - பொருளதிகாரம் அகத்திணையியல் புறத்திணையியல், இலக்கியவிமர்சனம்
3. கலாநிதி சு.வித்தியானந்தன்- நன்னூல் விருத்தி, தொல்காப்பியம் - எழுத்து, சொல்.திருக்கோவையார்.
4. கலாநிதி அ.சதாசிவம் - புறநானூறு
5. திருமுருகவேள் - சீவகசிந்தாமணி, கந்தவேத்தையார் இலம்பகம். திருமதி மகேஸ்வரி மகாதேவன் - திருநாவுக்கரசு நாயனார் புராணம்.
6. முதுநிலை விரிவுரையாளர் கா.கைலாசநாதக் குருக்கள் -சமஸ்கிருதம்
7. விரிவுரையாளர் - சாள்ஸ் த சில்வா - சிங்களம்
8. பேராசிரியர் ராய் - இந்திய வரலாறு.
9. கலாநிதி லக்ஸ்மன் பெரேரா - இலங்கை வரலாறு.

சிங்களம் எமது பயில்நெறியாளர்களுக்கெனத் தனித்துக் கற்பிக்கப்பட்டது. சமஸ்கிருதம் சிங்கள டிப்ளோமா மாணவரோடு இணைந்து ஆங்கில மொழிமூலம் கற்பிக்கப்பட்டது.

(தொடரும்...)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

என்பு இல் அதனை வெயில்போலக் காயுமே
அன்பு இல் அதனை அறம்.

- *திருக்குறள்.*

# நமது நோக்கு

## கண்ணீர் வடிக்கும் பூக்கள்!

யாழ்.குடாநாட்டிலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் பற்றியும், அவற்றில் சிலவற்றில் இடம்பெற்றுவரும் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் மோசடிச் சம்பவங்கள் தொடர்பாகவும், வெளியாகிவரும் தகவல்கள் - மனதைப் பெரும் நெருடலுக்குட்படுத்தும் அதேவேளை - இத்தகைய போக்கை எவ்வாறு தடுப்பது, ஆதரவற்று வாழும் சிறார்களைக் கருவறுத்துவிடத் துடிக்கும் காமுகர்களுக்கு சமூகம் அளிக்கப் போகும் பதிலென்ன என்பதுபற்றியெல்லாம் அங்கலாய்ப்புக்கள் எழுந்துள்ளன.

அதேவேளை - அண்மையில் வெளியான புள்ளிவிபரமொன்றின்படி, குடாநாட்டில் - தனிநபர்களாலும், மதஸ்தாபனங்களாலும், தொண்டர் நிறுவனங்களாலும் இயக்கப்பட்டுவரும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில், 50 இற்கும் மேற்பட்டவை - இன்னமும் ஒழுங்கான பதிவுகளைச் செய்யாமல் இயங்கி வருகின்றன என்ற செய்தியும் வெளியாகியிருக்கிறது.

சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் தேவை - யுத்தம் ஆரம்பித்ததன் பின்னர் அவசியமானதாக எழுந்திருக்கின்ற நிலையில்,

அத்தகைய நிலையங்கள் - மோசடித்தனமாகவும், பாலியல் துஷ்பிரயோகத்திற்குரிய தளங்களாகவும் விளங்குகின்றன என்றால் - அதனை, அலட்சியப்படுத்தக்கூடிய விடயமாகவோ, மூடிமறைத்துவிடக்கூடிய விவகாரமாகவோ ஆக்கிவிட முடியாது.

போரில் தாய், தந்தையரை இழந்து, உறவுகளைத் தொலைத்து வாழும் சின்னஞ்சிறார்கள் முதலாக - யுத்தத்தின் கோரப்பிடிகளுக்குள் சிக்கி, அகதிகளாகவும், இடம்பெயர்ந்தும் வாழ்ந்து, வாழ்க்கைப் போராட்டத்தின் துயரச் சிலுவைகளைச் சுமந்து நிற்கும் கண்ணீர்ப்பிஞ்சுகள் வரை- இன்று ஆதரவும், அரவணைப்பும் வழங்கப்பட வேண்டியவர்களாக அவர்கள் தமிழர் தாயகமெங்கும் பரந்துள்ளனர்.

இந்தச் சிறார்களுக்கான பாதுகாப்பை, கல்வியை, அடிப்படை வசதிகளை, நல்லதொரு எதிர்காலத்துக்கான வழிகாட்டலைத் தரவேண்டிய அவசியமான, மறுக்கமுடியாத கடப்பாடு எமது சமூகத்துக்கு உண்டு.

அவ்வகையில் - ஆதரவற்று வாடிநிற்கும் இளஞ் சிறார்களுக்கு - உரியவாறு பிரகாசமிக்கதோர் எதிர்காலத்தைத் தருவதற்காக - தேசியத் தலைவரின் நேரடிக் கண்காணிப்பில் உருவாக்கப்பட்ட சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், இன்று வன்னியில் மிகச்சிறந்த முறையில் இயங்கி வருகின்றன.

போரின் தாக்கம் மறந்து, உடலும் உள்ளமும் புத்துணர்வு பெற - சொந்தங்களை இழந்த சோகம் காணாமற் போய் - இத்தேசமே எங்கள் சொந்தவீடு, அனைத்து மக்களும் எம் உறவுகளே என்றவாறு - ஆரோக்கியமான சூழலில் அங்கு பல சிறார்களின் எதிர்காலம், மிகுந்த கவனிப்புடனும், எல்லையற்ற அக்கறையுடனும் கட்டிவளர்க்கப்படுகிறது.

சாதாரணமாக, வெளியே பெற்றோருடன் வாழும் சிறார்களைவிடவும் - மகிழ்ச்சியான, சுபீட்சமான வாழ்க்கைப் பாதையில் - வன்னியிலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் வாழும் சிறார்கள் - ஏராளம் நம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்கி நிற்கின்ற நிலையில் -

யாழ்.குடாநாட்டில் - தனியாராலும், மதஸ்தாபனங்களாலும், தொண்டர் நிறுவனங்களாலும் இயக்கப்படும் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் சில வற்றில் நடக்கின்ற செயல்கள்- சமூகத்தையே வெட்கித் தலைகுனிய வைக்கின்றவையாக உள்ளன.

உண்மையில் - சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்ட தேவையும், நோக்கமும் தளர்ந்துபோய் - கவனிப்பாரற்ற சூழலுக்குள் சின்னஞ்சிறார்களை உழலவைக்கும் போக்குக்குள் மூழ்கிக்கிடக்கும் இச்சில நிலையங்களின் நடத்தை -

சேவை மனப்பான்மையோடும், அர்ப்பணிப்போடும் யாழ். குடாநாட்டில் நடத்தப்படுகின்ற ஏனைய சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் பெயர்களையும் பாதித்து விடுவதாயுள்ளது.

ஒழுங்கான நிர்வாகமும், முறையான கண்காணிப்பும் அற்ற நிலையில் - சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் பணியாற்றும், மனித வடிவில் உலாவும் சில மிருகங்களின் வக்கிரத்தனங்களுக்கு - இளமொட்டுக்கள் ஏதுமறியாமல் பலியாகி நிற்கும் பரிதாப நிலைக்கு -

குற்றமிழைத்த கொடியவர்களுக்கு அதியுச்சபட்சத் தண்டனை வழங்கப்படுவதன் மூலமே - இதுபோன்ற சீர்கேடுகள் இனியும் நடக்காமலிருப்பதைத் தடுக்க முடியும்.

அதேவேளை - சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் நிர்வாகங்களும், அவற்றின் செயற்பாடும் மீளாய்வு செய்யப்பட்டு - உடனடியாகவே, உரிய வழியில் செயலாற்றக்கூடியதாக மாற்றங்கள் இடம்பெறவேண்டும்.

யாழ்.குடாநாட்டிலுள்ள சில சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் - நன்கொடை பெறுவதற்காகவும், பெறப்படும் நன்கொடைகளைச் சுருட்டிக்கொள்வதற்காகவுமே நடத்தப்படுவதாக மக்களால் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்ற நிலையில் -

சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கான உதவிகள் தொடர்பாகவும், அவை பயன்படுத்தப்படும் வழிமுறைகள் பற்றியும் - தகுந்த கண்காணிப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் முதலில் - குடாநாட்டிலுள்ள பதிவு செய்யப்படாத, குளறுபடிகளைக் கொண்டு இயங்கும் அனைத்து சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலுமுள்ள சிறார்களின் தற்போதைய நிலை, மிகத்துரிதமாகக் கவனத்திலெடுக்கப்பட்டு, அவர்களது உடல் - உள நலன்கள் தாமதமின்றிப் பேணப்பட வேண்டும்.

உறவுகளிழந்து, உதவிகளற்று அநாதரவாய்க் கலங்கி நிற்கும் எம் பிஞ்சுகளின் வாழ்வும், எதிர்காலமும் பாதுகாக்கப்பட வேண்டும்.

உரியவர்கள் இதனைக் கவனிப்பார்களா? உடனடியாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு - அணைத்தெடுப்பாரின்றி அவலமுற்று நிற்கும் - எம் இளம் சகோதரர்களைக் காப்பதற்குரிய காலம் கதிகொண்டு வந்துவிடாதா...?.

# மழை நீரைத் தேக்கிவைப்பதற்கு நெடுந்தீவில் ஏற்பாடு செய்யுங்கள்

## மக்கள் நல்வாழ்வுப் பணிக்கழகம் வேண்டுகோள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில், மழைநீரைத் தேக்கிவைக்க நடவடிக்கை எடுக்கப்படாததால், பெரும்பகுதி நீர் கடலுடன் சென்று கலப்பதாகவும், இதனால் - குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகிவருவதாகவும் - நெடுந்தீவு மக்கள் நல்வாழ்வுப் பணிக்கழகம், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபருக்கும், யாழ்.செயலக நியாப் திட்ட நிறுவனப் பிரதிப் பணிப்பாளருக்கும் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

நெடுந்தீவில் பெய்யும் மழைநீரை, சரியான முறையில் பாதுகாத்து வைப்பதற்கான ஒழுங்குகள் செய்யாததினால், மழைநீரின் முக்கால்பங்கிற்கும் மேல், கடலுடன் சென்று கலந்துவிடுகின்றது. இதனால், நெடுந்தீவின் நிலத்தடிநீர் படிப்படியாக உவர்த்தன்மை அடைந்து, தற்சமயம் முக்கியமாகக் குடிநீருக்காக உபயோகிக்கும் இடமான 'சராப்பிட்டி' கிணற்று நீரும் குடிதண்ணீருக்கு ஏற்றதாக இன்றி, உவர்த்தன்மை கூடி வருகின்றது. நிலத்தடி நீர் சரியானமுறையில் பாதுகாக்கப்படாமையே இதற்குக்காரணம் ஆகும்.

மேலும், மழை பெய்யும் காலங்களில் நீர்த்தேக்கங்களில் நீர் தங்கிநிற்க வாய்ப்பில்லாதமையால், நிலமும் வரட்சியடைந்து, பசுமைத்தன்மை, ஈரலிப்பு முதலியன குன்றி பாலைவனம்போல் மாறும் நிலைமை எற்பட்டுவருகின்றது.

நெடுந்தீவில் உள்ள மூன்று பரந்த நீர்த்தேக்கங்களையும் சுலபமாக அணைகட்டி, நீர்தேக்கி, வருடம் முழுவதும் பாதுகாக்கக்கூடிய வகையில் நில அமைப்பு வாய்ப்பானதாக இருக்கின்றது. இக்குளங்களுக்கு அருகாமையில் - வெங்காயம், உருளைக்கிழங்கு, பீற்றூட் மற்றும் உணவு பயிர்செய்யும் நூறு தொடக்கம் நூற்றிருபது ஏக்கர் வரையான விவசாய நிலங்களும் உள்ளன. இவையும் தற்போது பயன்படாது உள்ளன.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, இக்குளங்களுக்கு அருகாமையில் உள்ளவர்கள் தங்களின் கால்நடைகளுக்கும், வீட்டுத் தேவைகளுக்கும் - இக்குளங்களின் அருகாமையில் உள்ள கிணறுகளில் தண்ணீர் எடுத்துப் பாவித்தனர். தற்போது, சில காலமாக இக்குளங்கள் தட்டை நிலமாகி இருப்பதால், மழைநீர் தேங்காமல் கடலுக்குச் சென்றுவிடுகிறது.

பிரதானமாக - வெட்டுக்குளம், பெரியகளி, இராமன் விழாப்பு போன்ற பரந்த குளங்களில் நீர் தேக்கிவைப்பதற்கான அணைக்கட்டை சுலபமாக அமைக்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. இப்பகுதியில் வாழும் மக்கள் முக்கியமாக, வெட்டுக்குளம் என்னும் குளத்தை நீர்த்தேக்கமாக்கித் தருமாறு கிட்டத்தட்ட ஐம்பது வருடங்களுக்கு மேலாக அரசாங்கத்திடம், பலதடவைகள் வேண்டுகோள் விடுத்தனர்.

இபபகுதியில் உள்ள அநேக பனைமரங்களும், ஏனைய விருட்சங்களும் - பட்டும், அழிந்து போயும் உள்ளன. நீர் தேங்கிநிற்கும் காலங்களில் இக்குளங்களில் மீன், இறால் பிடித்து வாழ்வு நடத்தும் மக்களும், நெடுந்தீவு மக்களில் பெரும்பாலாரும் - குளங்களை நீர்த்தேக்கமாக அமைக்குமாறு பலதடவைகள் வேண்டுகோள் விடுதபோது, அவ்வாறு செய்வதாக நாடாளுமன்றப் பிரதிநிதிகளும், அரசாங்க அதிகாரிகளும் உறுதி கூறினர். ஆனால், இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

வடக்கரவெளி, அங்காலப்பை, வண்ணான்களி, வெல்லைக்களி, நெடுங்குளம், கும்பிட்ட தில்லைக்குளம், இரவதை, எருவிலி, சல்லிக்குளம் போன்ற நீர்த்தேக்கங்களும் - நெடுந்தீவின் நிலப்பரப்பில் ஆங்காங்குள்ளன. பெரும் குளங்களுக்கு முன்னுரிமை கொடுத்தும், காலகெதியில் ஆங்காங்குள்ள ஏனைய நீர்த்தேக்கங்களுக்கு அணைகட்டி, நீர் தேக்கியும் வைத்தால் - உவர்ப்புத்தன்மை அடைந்துவரும் நிலத்தடி நீர் குறுகியகாலத்தில் மாற்றமடைந்து, மீண்டும் பாவனைக்குரிய நன்னீராக மாற்றம் அடையும் என நம்புகிறோம். இப்பாரிய பணிகளை மேற்கொள்ளுவதன் மூலம் - பாலைவனம் போல் மாறிக்கொண்டிருக்கும் நெடுந்தீவுக் கிராமம் பசுமை நிறைந்த செழிப்புள்ள பிரதேசமாக மீண்டும் விரைவில் மாற்றம் அடையும் என்பதற்கு ஐயமில்லை.

தற்சமயம் வரட்சியான பிரதேசங்களை - பசுமைப் பிரதேசங்களாகவும், மக்களுக்குப் பயனுடைய பிரதேசங்களாகவும் ஆக்கி, மக்களின் நல்வாழ்வுக்கு உதவும் "நியாப் திட்டத்தின் உதவி" மூலம் இக்குளங்களை அணைகட்டி, நீர்த்தேக்கங்களாக ஆக்குவதன் மூலம் - நெடுந்தீவுப் பிரதேசம் மீண்டும் வளம்பொருந்திய பசுமையான தீவாக மாறும் என மக்கள் நம்புகின்றனர் என, இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உல்லாசப் பயணிகளின் வருகை 25 சதவீதத்தால் அதிகரிப்பு!

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த வருடத்தை விட 25 சதவீதத்தால் அதிகரித்திருப்பதாக, உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

கடந்த வருடம் முதல் ஐந்து மாதங்களை விட, இந்த வருடம் முதல் ஐந்து மாதங்களிலேயே, இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 25 சதவீதத்தால் அதிகரித்திருக்கிறது.

இலங்கையின் உல்லாசப் பயணத்துறையை மேலும் மேம்படுத்துவதற்காக - ஐந்து மாகாணங்களில் உல்லாசப் பிரயாண வலயங்களை உருவாக்குவதற்கு, உல்லாசப் பயணத்துறை அமைச்சு முன்வைத்த யோசனையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

அத்துடன் உல்லாசப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கும், தற்போது அவர்களுக்குக் கிடைக்கும் வசதிகளை அதிகரிப்பதற்கும், ஹோட்டேல்களை தெரிவு செய்வதற்கும் சில சலுகைகளை வழங்குவதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் காமினி லொக்குகே மேலும் தெரிவித்தார்.

# இத்தாலியிலிருந்து வந்த சடலத்தில் இருதயத்தைக் காணவில்லை!

## பிரேத பரிசோதனையில் தெரியவந்தது

இத்தாலியில் மரணமடைந்த ஒருவரின் பிரேத பரிசோதனையைக் கொழும்பில் மேற்கொண்டபோது, அவரது இதயம் மற்றும் பல முக்கிய உறுப்புக்கள் இல்லாதிருப்பது தெரியவந்தது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது-

கடவத்தையைச் சேர்ந்த நிமலசிறி சில்வா என்பவர் கடந்த இரண்டு வருடங்களாக, இத்தாலியில் சமையற்காரராகப் பணியாற்றி வந்தார். இவர் கடந்த 15 ஆம் திகதி - அங்கு திடீரென இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டு, சடலம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இவரது மனைவியின் கோரிக்கைக்கு அமைவாக சட்ட வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனையை நடத்தியபோது, அச்சடலத்தில் இதயம் உள்ளிட்ட பல உறுப்புக்கள் சடலத்தில் இல்லாதிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிவான், இத்தாலியில் நடத்தப்பட்ட முதலாவது பிரேத பரிசோதனை அறிக்கையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இறந்தவரின் மனைவி - தனது கணவர் நல்ல உடல் ஆரோக்கியத்துடனேயே இருந்ததாகவும், இறப்பதற்கு முதல் நாளும் தொலைபேசியில் கதைத்தபோது - நல்ல சுகமுடன் இருப்பதாகவும் தெரிவித்தார் என்றும், 3 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பணத்தையும் அனுப்பிவைத்தார் என்றும் தெரிவித்ததுடன் கணவரின் மரணத்தில் சந்தேகமிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# உடுவில் - சங்குவேலிப் பகுதிகளில் மோட்டார் சைக்கிள்களில் திருடர்கள்!

உடுவில், சங்குவேலிப் பகுதிகளில் மோட்டார் சைக்கிளில் வந்து சங்கிலி அறுக்கும் திருடர்களின் கைவரிசை அண்மைக் காலமாக அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் - சங்குவேலி சிவஞானப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் சென்றுகொண்டிருந்த வயோதிபரிடம், மோட்டார் சைக்கிளில் வந்த, இரண்டு கறுப்புக் கண்ணாடியுடனான "ஹெல்மெற்" அணிந்த வாலிபர்கள் வீடு விசாரிப்பதாக நடித்து, அவரிடமிருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடிவிட்டனர்.

இச் சம்பவம் நடைபெற்ற சிறிது நேரத்தில், அவ்வீதியால் கோவிலுக்கு சென்று விட்டு திரும்பிய, 9 வயதுச் சிறுமியிடமும் இதே பாணியில் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது.

இரண்டு தினங்களுக்கு முன்னர், உடுவில் லவ்லேனில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த யுவதியிடமிருந்தும், மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்கள் சங்கிலி அறுத்துக்கொண்டு தப்பிவிட்டனர்.

இச்சம்பவங்களால், மக்கள் பெரிதும் அச்சமடைந்துள்ளனர். 'ஏ-9' பாதை திறக்கப்பட்ட பின்னரே - இப்படியான சம்பவங்கள் அதிகரித்திருப்பதாகப் பலரும் பேசிக்கொள்கின்றனர். (101)

# கண்ணிவெடி அகற்றும் பணி திருகோணமலையில் ஆரம்பம்!

திருகோணமலை மாவட்டத்தில், முதன் முறையாக கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. டென்மார்க் நாட்டு கண்ணிவெடி அகற்றும் நிறுவனம், உள்ளூர் கண்ணிவெடி அகற்றும் தொண்டர்களுடன் இணைந்து இந்தப் பணியை மேற்கொண்டிருப்பதாக - டென்மார்க் நாட்டு கண்ணிவெடி அகற்றும் அமைப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

திரியாய்ப் பகுதியிலேயே இக்கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன. முதற்கட்டமாக திரியாய்ப் பாடசாலைக்கு அருகில், கடந்த வியாழக்கிழமை முதல் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இப்பகுதியில் இருந்து பத்து மிதிவெடிகள் மற்றும் ஒரு .குண்டு என்பவற்றை இந்த நிபுணர்கள் அகற்றியதாகவும் தெரியவருகிறது.

# தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவு!

மத்திய, மாகாண அரச சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம், கடந்த 18 ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது, நடப்பு வருட உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்தக் கூட்டத்தில், தலைவராக ரி.கே.இராஜேந்திரராவும், உப தலைவராக சி.ரகுநாதனும், செயலாளராக இ.இரத்தினசிங்கமும், உப செயலாளராக பு.சறோஜாவும், பொருளாளராக த.தனபாலசிங்கமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# நாளைய உலகையாளும் கரங்கள்; பூத்துக்குலுங்கும் பூஞ்சோலைகள் !

**'புதிய சரிதம் எழுதும் பூக்கள்**
**பூத்துக் குலுங்கும் சோலை - இங்கே**
**இதயம் மகிழும் எமக்கு நல்ல**
**காலம் உண்டு நாளை.**

**பழகிப் பேச வருக வருக**
**பாசம் உள்ள யாவரும் - குரு**
**குலத்திலுள்ள எம்மைக் காண**
**உங்கள் உள்ளம் உருகிடும்'.**



இது குருகுலப் பிள்ளைகள், தாம் பாடி மகிழும் பாடல்வரிகள்.

ஆடல், பாடல் எனத் தம்மை ஆனந்தப் படுத்திக்கொள்ளும் பிள்ளைகளின் ஆலயம் தான் குருகுலம். இங்கே சந்தோஷ மேகம் பூச் சொரியும். வண்ணமயில் வந்திறங்கி நடனமிடும். இன்பம் சூழ குருகுலவாசம் ஒளிமய மாய்த் துலங்கும்.

இவ்வாறே -

**"காந்தி நிலையத்திலுள்ள குழந்தைகள்**
**தெய்வக் குழந்தைகளே தீ ஒரு**
**கையில் தவழ்கின்ற எல்லாக் குழந்தையும்**
**பாசக் கொழுந்துகளே"**

இது காந்தி நிலையச் சிறார்கள் பாடும் பாடல் வரிகள்.

புள்ளிமான்கள் போலத் துள்ளித்திரியும் பிள்ளைகளின் முகங்கள் ஒவ்வொன்றும் - ஆயிரம நிலவுகள்போல ஒளிவீசும். எந்தச் சஞ்சலங்களும் இல்லாத மனங்கள். பார்ப்பவர்களை வசீகரிக்கும் இச்சிறார்களுக்கு, பின்னுள்ள சோகங்கள் சொல்லி மாளாதவை.

போர் - தாயக மண்ணில் தாண்டவமாடிய கடந்த காலங்களில் தாயை, தந்தையை, உறவை என வாழ்வில் அனைத்தையும் இழந்து, நிர்க்கதியாக்கப்பட்ட - ஆயிரம், ஆயிரம் சிறார்கள், புகலிடம் தேடி அலையலாயினர். இவர்களுக்கு அன்பு, அரவணைப்பு, பராமரிப்பு, பாதுகாப்பு என்பன தேவைப்பட்டன.

இன்றைய சிறுவர்களைப் பேணிக்காத்து- ஒழுக்கசீலர்களாய் வளர்க்க வேண்டிய பொறுப்பும், கடமையும் தமக்கு உண்டென்பதை உணர்ந்த தேசியத் தலைவர் வே.பிரபாகரன், சிறுவர் நேயச் செயற்பாடுகளைத் துரிதமாக முன்னெடுக்க உறுதிபூண்டு செயற்படுத்தினார். அதன் பயனாகச் சிறுவர் பராமரிப்பு நன்னடத்தைச் செயற்பாடுகள் அதி தீவிரம் பெற்றன. ஏலவே கிளிநொச்சியில் இயங்கி, காலப் போக்கில் இயங்கும் சக்தியை இழந்திருந்த குருகுலம், காந்தி நிலையம், சிறுவர் பராமரிப்பு இல்லங்களைப் பொறுப்பெடுத்து - திறம்பட நடத்தும் பணி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்குக் கிட்டியது.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறைந்த எண்ணிக்கையான சிறுவர்களுடன், மேற்படி இல்லங்களைப் பொறுப்பேற்றுக் கொண்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - இன்று 700 இற்கு மேற்பட்ட சிறார்களைத் தன்னகத்தே கொண்ட ஆலவிருட்சம்போல வளர்ந்து, நிமிர்ந்து நிற்கின்றது.

காந்தி நிலையம் என்று அழைக்கப்படும், அகில இலங்கை சேவா சங்கம். எனும் சிறுவர் பராமரிப்பு இல்லம் - 1957 இலும், குருகுலம் என்று அழைக்கப்படும் - கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கம் எனும் சிறுவர் பராமரிப்பு இல்லம் - 1960 இலும், கிளிநொச்சி நகரை அண்டிய உருத்திரபுரம், ஜெயந்தி நகரிலும் தோற்றம் பெற்றன.

குருகுலம் சிறுவர் பராமரிப்பு இல்லத்தில்- 507 பெண்பிள்ளைகளும், காந்தி நிலையம் சிறுவர் இல்லத்தில் 169 ஆண்பிள்ளைகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

நாளுக்கு நாள் சிறுவர் எண்ணிக்கை அதிகரிக்க, அதிகரிக்க - தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கும் சுமை அதிகரிக்கத் தொடங்கியது. அதற்குப் பரிகாரம் தேடவேண்டியது ஒருபுறமிருக்க, ஏற்று நடத்துவதற்கான வலுவைப் பெறுவதற்கான உபாயங்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வகுத்துக்கொண்டது.

இந்நிலையில்தான், சிறுவர் மேம்பாடு தொடர்பான இலக்குகளை நிர்ணயிக்கும் தார்மீகக் கட்டுக்கோப்பு - சகல வழிகளிலும் விரிவடையலாயிற்று. ஊனமுற்றோர், புறக்கணிக்கப்பட்டோர், வறியோர், வயோதிபர், இடம்பெயர்ந்தோர், போஷாக்கு, சுகாதாரம் மற்றும் பெண்ணியல் பிரச்சினைகள் என்பன தமிழர் புனர்வாழ்வுக்க கழகத்தின் கரிசனைக்குரிய விடயங்களாயின.

கடந்தகாலங்களில் - எமது மண்ணில் நிலவிய போர், பொருளாதாரத் தடைகள் என்பன- எமது மக்கள் வறுமை, நோய், போஷாக்கின்மை, எழுத்தறிவின்மை ஆகியவற்றுடன் வாழ்நாளைக் கழிக்கவேண்டிய அவல நிலைக்குத் தள்ளின.

இப்பயங்கரமான வாழ்வில், மிகமிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் எமது வருங்காலச் சந்ததியினரான இன்றைய இளவயதினரே.

சின்ன வயதில் வாழ்க்கைச் சுமையைச் சுமக்கவும், வாழ்வைத் தொலைத்தவர்களாக - வீதிக்கு வீதி அலையவும், கையேந்தவும், கூலித்தொழில் செய்யவும் எமது சிறார்களை நிர்ப்பந்தித்தவர்கள் யார்?.

சிறுவர் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கவும், அவற்றைப் பிசகின்றி நிறைவேற்றவும் ஒப்புக்கொண்டு உடன்பட்டுள்ள உலக நாடுகள் - பிள்ளைகளுக்கு முன்னெப்போதும் இல்லாத நன்மைகளும், பலாபலன்களும் கிடைக்கச் செய்ய உறுதிபூண்டுள்ளன.

"பிள்ளைகளுக்குப் பராமரிப்பும், பாதுகாப்பும் வழங்குவது உரிமை". அது ஒரு சேமநல நடவடிக்கையல்ல என்பது, சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயக் கோட்பாடு.

ஆனால், இன்றைய உலகில் - ஏன் இலங்கை ஊடகங்கள் பரபரப்பாக நாளுக்கு நாள் உளறும் செய்திகள் எவை?

பாலியல் ரீதியாக சிறுவர்கள் இம்சைப்படுத்தல், பிள்ளைகளை வேலைக்கு அமர்த்தல், சிறுவர்களைக் கடத்தல், சிறுவர் காணாமல் போதல், குற்றச்செயல்களில் ஈடுபடத் தூண்டுதல் போன்ற சிறுவர் உரிமைகளைப் பாதிக்கும் சம்பவங்களே இன்று சகலரதும் கவனத்தை ஈர்க்கின்றன.



உலகில் சுமார் 3.2 மில்லியன் பிள்ளைகள் - தாயை அல்லது பெற்றோர் இருவரையும் இழந்து அல்லல்படுகின்றனர். 130 மில்லியன் பிள்ளைகள் உலகில் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை. 250 மில்லியன் பிள்ளைகள் கூலியாட்களாக வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

உலகில் - சிறுவர் உரிமைகள் அதல பாதாளம் நோக்கிச் செல்கின்றதையே இப்புள்ளி விபரங்கள் சுட்டி நிற்கின்றன.

இதற்கு மாறாக, எமது தமிழீழத் தாயக மண் - சிறுவர் உரிமைகள் விடயத்தில் மிகச் சிறப்புக் கவனம் எடுத்துள்ளமையை, இங்குள்ள சிறுவர் நலன் நேயச் செயற்பாட்டுத் திடடங்கள் கட்டியம் கூறுகின்றமை நோக்கத்தக்கது.

நிச்சயமாக - உறவிழந்த அல்லது பிரிந்த சிறார்களை, ஆதரித்துப் பராமரிக்கும் 18 சிறுவர் பராமரிப்பு இல்லங்களை - தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தி வருகின்றமை மனங்கொள்ளத்தக்க விடயமாகும். சுமார் 2000 இற்கு மேற்பட்ட சிறார்களின் வாழ்வகங்களாக இச்சிறுவர் இல்லங்கள், வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன.

ஏனையோர் நடாத்தும் சிறுவர் இல்லங்கள் போலல்லாது - எந்தவிதமான விமர்சனங்களுக்கோ, குற்றச்செயல்களுக்கோ உட்படாது, களங்கப்படாது, புனித ஆலயங்களாக, அன்பின் உறைவிடங்களாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடத்தும் இல்லங்கள் முன்மாதிரியாகத் திகழ்கின்றன.

பெண் பிள்ளைகளுக்கெனத் தனிமையான இல்லமாகத் திகழும் - குருகுலம் சிறுவர் பராமரிப்பு இல்லமும், ஆண் பிள்ளைகளுக்கெனத் தனியான இல்லமாக இயங்கும் காந்தி நிலையமும் - முறையே 43 ஆம், 46 ஆம் அகவை நிறைவை இன்று கோலாகலமாகக் கொண்டாடுகின்றமை வாழ்த்துக்கும், வரவேற்புக்குமுரிய நற்செய்தி என்றால் மிகையாகாது.

நீண்டகாலமாக உறவிழந்த சிறார்களுக்கு, நிழல்கொடுத்த விருட்சங்களுக்கு வெற்றிவிழா. வாழும் வகையிழந்து, அல்லற்பட்ட உள்ளங்களை - உலகையாளும் திறன் வளர்த்து, மெருகேற்றிவிட்ட அன்பு நெஞ்சங்களைப் பாராட்டி, இப்புனிதப் பணியைத் தொடர்ந்தும் சிறப்புற முன்னெடுக்கவேண்டி- தட்டிக்கொடுப்பது பெரியோர்கள், அறிஞர்கள், கொடை வள்ளல்கள் - அனைத்திற்கும் மேலாக தேசம் கடந்து வாழும் பாச உறவுகள் அனைவரினதும் தலையாய கடமையாகும்.



பல்வேறுபட்ட புனர்வாழ்வு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுவரும், தமிழர் புனர்வாழ்வுக் கழகம்- இவ்வாறான நலசெயற்திட்டங்களை அதிசிரத்தை எடுத்துச் செயறபடுத்த, உநதுசக்தியாகத் திகழ்பவர்கள் புலம்பெயர்ந்து வாழும தமிழ் உறவுகளே. அவர்களின் அயராத உழைப்பின் சிறுதுளிகள், பெருவெள்ளமாக எமது கரஙகளை வந்துசேருகின்றன. அவை இங்குள்ள ஒவவொரு சிறார்களுக்கும் சுவறுகின்றன.

குறிப்பாக - அவுஸ்திரேலியா, மலேசியா, நியூசிலாந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்களினதும், அந்நாடுகளில் வாழும் எம இரத்த உறவுகளினதும் - பேராதரவுடனும், பெரும் பங்களிப்புடனுமே குருகுலம், காந்தி நிலையம், சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் தாயகத்தில் சிறப்பாக இயங்கிவருகின்றன.

விட்டுவிலகி - உலகில் எங்கெங்கோ வாழ்ந்தாலும், எம்மைச் சொட்டும் மறவாத உங்கள் பாதார விந்தங்களில் தொட்டுத் தொழுகின்றோம். தோழமையுடன் தழுவுகின்றோம்.

ஏழைகள் வயிற்றில் பால் வார்க்கும் உங்கள் கரங்களை இறுகப்பற்றி முத்தமிடத் துடிக்கின்றோம்.

''யாருமற்றவர் அல்லர் தமிழர். உலகெங்கும் உறவுண்டு'' என்ற செய்தியை உரக்கச் சொல்லவும் எந்தப் பெரும் சவால்களை எதிர்கொண்டு - எம் மண்ணும், மக்களும் நிமிரவும் - வளம் சேர்க்கும் உங்கள் பலம் எமக்குக் கிட்டும்வரை, உலகில் எந்தச் சக்தியாலும் எம்மை அழிக்கவோ, அசைக்கவோ முடியாது.

உறவுகளை இழந்தோம் - பிரிந்தோம் என்ற மனஏக்கங்கள் போக்கி, அன்பால் அரவணைத்து - பிள்ளைகளின் கல்வி, ஆளுமை, திறமை உள மற்றும் உடல் சார்ந்த ஆற்றல்கள் ஆகியன முழுமையாகப் பரிணமிக்க

**குருகுலம் சிறுவர் பராமரிப்பு இல்லம் 43 ஆவது ஆண்டு நிறைவையும், காந்தி நிலையம் 46 ஆவது ஆண்டு நிறைவையும் இன்று கொண்டாடுகின்றன.**

வழிவகுத்து, ஆற்றுப்படுத்தும் செயற்பாடுகளில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் - சிறுவர் பராமரிப்பு இல்லங்களை நிர்வகித்து வருகின்றது.

ஏற்றத்தாழ்வுகள், பாரபட்சங்கள் அற்று- ஒரு தாயின் குழந்தைகளாகவே இல்லக் குழந்தைகள் யாவரும் பராமரிக்கப் பெற்று வருகின்றமை, ஒற்றுமை உணர்வையும், சகோதர பாசத்தையும் வளர்த்துக்கொள்ள வழிகோலுகின்றன.

"உறுதியான உடலிருந்தாலே, உறுதியான மனம் உருப்பெறும்'' என்பதற்கிணங்க- சிறார்களுக்கு கலை, கலாசார மற்றும் பொழுதுபோக்கு, ஓய்வு, விளையாட்டு, ஓவியம், கராத்தே நடவடிக்கைகளில் பூரணமாகப் பங்கு கொள்ளவும் - இவ்வில்லங்களில் வாய்ப்பளிக்கப் பெற்றுள்ளன.

பிள்ளைகளுக்குப் போரினால் ஏற்பட்ட மன அழுத்தங்களைச் சமாளிப்பதற்கும், துயர உணர்வுகளிலிருந்து விடுபடுவதற்கும் இவை மூலமருந்தாக அமைகின்றன. இவை பிள்ளைகளுக்கு சமயோசிதமாக நடந்துகொள்ளும் திறமையை வளர்க்கின்றன.

என் வீடு எங்கே? என்ற மன அழுத்தம், மன வடு நீங்கி - "இது எங்கள் வீடு'' என்ற உள மகிழ்வை சிறுவர் இல்லங்கள், பிள்ளைகள் மனங்களில் துலங்க வைத்துள்ளமையானது இப்பணிக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இவ்வில்லங்களில் பராமரிக்கப்படும் பிள்ளைகள் - கல்வி மற்றும் விளையாட்டு, கலை இலக்கியப் போட்டிகளிலும் பங்குபற்றிச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று - தமக்கும், தாம் சார்ந்த இல்லங்களுக்கும் பாராட்டுக்களைப் பெற்றுத்தருகின்றனர். பல்கலைக் கழகப் பட்டப்படிப்புக்குத் தெரிவான மாணவர்கள் தவிர, ஏனைய உயர்தர மாணவர்கள் தொழிற் பயிற்சிகளைப் பெறுகின்றார்கள்.

தத்தம் அறிவு, ஆளுமை என்பவற்றை வளர்த்துக் கொண்டு - வாழ்வில் சுயமாக இயங்கும் தன்னம்பிக்கை, ஒவ்வொரு பிள்ளையின் மனங்களிலும் ஏற்படுத்தப்படுகின்றன. இத்தகைய பிள்ளைகள் - தாம் மீண்டும் "முழுமை" பெற்றுள்ளதாகவும், சமுதாயத்தின் உறுப்பினராக வாழ முடியும் என்றும் உணர்கின்றனர்.

சிறார்களின் வாழும் உரிமைகளை மறுத்து, அவர்களை நடைப்பிணங்களாக்கித் தெருவில் ஏதிலிகளாக அலைய வைத்த அரசாங்கம்- தற்போதைய சமாதான நல்லெண்ணச் சூழலில்கூட, போரால் பாதிககப்பட்ட சிறுவர்களுக்கு உதவவேண்டும் என்று எள்ளளவும் கூட அக்கறை காட்டியதில்லை.

அதற்கு மாறாகத் தொடர்ந்தும் விஷமத்தனமான பொய்ப் பிரசாரங்களை, சிறுவர் மனங்களைப் பாதிக்கும், இம்சைப்படுத்தும் செயற்பாடுகளுக்கு ஊக்குவித்தும் வருகின்றது. சிறுவர்களைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்லும் ஆபாசப்படங்கள், மது, போதைவஸ்து பாவனை போன்ற கலாசார சீரழிவுகளுக்கும், தீய நடத்தைகளுக்கும் பலிக்கடாவாக்கி வருகின்றதையே காணமுடிகின்றது.

சிறுவர் சேமநலன் திட்டங்களை முன்வைத்து - அவர்கள் வாழ்வை ஒளிமயமாக்க ஆக்கபூர்வமாக செயற்பட வேண்டிய அரசு - தனது தார்மீகப் பொறுப்பிலிருந்து தூர விலகி நிற்பதான செயற்பாடே - இன்றைய சிறுவர்கள், அரசின் மீது நம்பிக்கை இழக்கவும், அரசிற்கு எதிராகக் கிளர்ந்தெழவும் தூண்டுகின்ற காரணிகள் என்பதைப் பலரும் உணரமுடியும்.

ஆனால், எமது தாயகத்தைப் பொறுத்தவரை - இந்த அரசல்ல, எந்த அரசுகளாயினும் உதவ முன்வந்தாலென்ன - முன்வராவிட்டாலென்ன தமிழீழச் சிறார்களை ஆற்றல் மிக்கவர்களாக, அறிவு ஜீவிகளாக, தேசப் பற்றுள்ளவர்களாக, போர்க் கலையில் வல்லுநர்களாக, நேர்மையும் - கண்ணியமும் மிக்கவர்களாக, ஒரு புரட்சிகரமான பரம்பரையை உருவாக்க அயராது உழைப்போம் என்ற தேசியத் தலைவரின் தீர்க்கதரிசனமான சிந்தனை, செயலுருப்பெறும் காலம் வெகு தொலைவிலில்லை. அதற்குப் புலம்பெயர்ந்து வாழும் எமது இரத்த உறவுகளின் கரங்களை இறுகப் பற்றித் தொடர்ந்தும் பயணிப்போம்.

"உறவிழந்த சிறார்களுக்கு உதவுவோம்"

**வேலணையூர் சுரேஸ்.**

## தவணை அடிப்படையில் சூரிய மின்கலங்கள்

பளை தமிழீழ வைப்பகக் கிளையினர், கடனடிப்படையில் சூரிய மின்கலம் வழங்கும் திட்டததைப் புதிதாக ஆரம்பித்துள்ளனர்.

இதன்படி, வைப்பகத்தில் ஐயாயிரம் ரூபாவுக்கு மேல் கணக்கு வைத்திருக்கும் ஒருவர்- 18 மாத தவணை அடிப்படையில் சூரிய மின்கலம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளமுடியும். ஐந்து மின்குமிழ்கள் வரை பொருத்தக்கூடிய சூரிய மின்கலங்களே தவணை அடிப்படையில் தமிழீழ வைப்பகத்தினால் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (115)

# என்ணெய் விநியோகக் குழாய் விபத்தில் சிக்கி 105 பேர் பலி!

## நைஜீரியாவில் மூன்று நாட்களாக நடந்த பயங்கரம்



கருகிக் கிடக்கும் சடலங்கள்.

நைஜீரியாவில், எண்ணெய் விநியோகக் குழாயில் நடந்த குண்டு வெடிப்பொன்றில் - ஆகக் குறைந்தது 105 பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த மூன்றாண்டுகளில் - நைஜீரியாவில் நடந்த மிகக் கோரமான விபத்து இதுவெனக் கூறப்படுகிறது.

கொல்லப்பட்டவர்களின் உடல்கள் - சம்பவம் நடந்த பகுதியெங்கும் கருகிக் கிடப்பதாகவும், ஏராளமானோர் எரிகாயங்களுக்குள்ளாகியதாகவும் கூறப்படுகிறது.

குறிப்பிட்ட எண்ணெய் விநியோகக் குழாயில் - கடந்த ஆறு வாரங்களாக எண்ணெய் திருட்டுக்களில் ஈடுபடுவோர், குழாயைச் சேதப்படுத்தி வந்ததாலேயே இவ்விபத்து ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

போர்ட் ஹார்கோட் நகரிலிருந்து - 230 கிலோமீற்றர்கள் தொலைவிலுள்ள ஈனுரு நகருக்கு எண்ணெய் கொண்டுசென்ற விநியோகக் குழாயிலேயே விபத்து நடந்திருக்கிறது. விநியோகக் குழாயில் ஒழுக்குகள் தெரிந்த போதும் - அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என, அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நைஜீரியாவில் இவ்விதம் - எண்ணெய் விநியோகக் குழாய்களில், எண்ணெய் திருடுவது மிகச் சாதாரணமாகிவிட்டதனாலேயே - இதுபோன்ற விபத்துக்கள் நடப்பதாகத் தெரியவருகிறது.

வியாழக்கிழமை இந்த விபத்து நடந்தபோதும் - மூன்று நாட்களாகத் தீ கொழுந்துவிட்டெரிந்ததால் - நேற்று மாலையே சடலங்களை அப்புறப்படுத்தக்கூடியதாக இருந்தது எனவும் -

பலர் - குடும்பம் குடும்பமாகக் கொல்லப்பட்டு விட்டதாகவும், மீட்புப் பணிகளில் ஈடுபட்ட செஞ்சிலுவைச் சங்கத்தினர் தகவல் வெளியிட்டனர்.

இதற்குமுன்னர் - 1998 ஆம் ஆண்டு ஜெஸ்ஸே என்ற இடத்தில் நடந்த எண்ணெய் விநியோகக் குழாய் விபத்தில் 1,000 பேர்வரை பலியானதும் குறிப்பிடத்தக்கது.



கிரீஸில் நடைபெறும் ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் மாநாட்டிற்கு, வெளியே - பொலிஸார் - ஆர்ப்பாட்டக்காரர் மோதல்.

## மன்னராவது எனது கடமை; இளவரசர் வில்லியம் அறிவிப்பு!



தனது 21 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடியிருக்கும், பிரிட்டனின் முடிக்குரிய இளவரசரும், டயானா - சார்ள்ஸ் தம்பதியினரின் முதலாவது மகனுமான, இளவரசர் வில்லியம் - பிரிட்டனின் மன்னராவதே தனது முதற் கடமை என அறிவித்துள்ளார்.

தனது பிறந்த நாளையொட்டி - தெரிந்தெடுக்கப்பட்ட பத்திரிகையாளருக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

'எல்லோரது கேள்விகளும், நான் மன்னராவது பற்றியே இருக்கின்றன. இது எனக்குரிய வினாவல்ல. நான் பிறந்ததும், கடமையும் அதுவேதான்' என்றார் இளவரசர் வில்லியம்.

பிரிட்டிஷ் மகாராணி எலிஸபேத், தனக்கான பெரும் வழிகாட்டி என்ற அவர் - அவரைப் பற்றித் தாம் பல சந்தர்ப்பங்களில் பெருமிதமடைந்ததாகவும் தெரிவித்தார்.

தன்னைப் பல்வேறு பெண்களும் துரத்துவதை ஒப்புக்கொண்ட வில்லியம் - அது சீரியஸான விடயமல்ல என்றும் கூறினார்.

இதேவேளை - இளவரசர் வில்லியமின் பிறந்தநாள் கொண்டாடப்பட்ட வின்ட்ஸர் மாளிகைக்குள், அத்துமீறி நுழைய முற்பட்ட ஒருவர் - பிரிட்டிஷ் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இதுபற்றிய முழுமையான விசாரணை நடத்துமாறு, பிரிட்டிஷ் அரசின் உள்துறைச் செயலாளர் டேவிட் பிளாங்கர்ட் உத்தரவிட்டிருக்கிறார்.

## ஈராக்கில் எண்ணெய்க் குழாய்களில் நேற்றும் திடீரென குண்டு வெடித்தது!

ஈராக்கின் தலைநகர் பக்தாத்துக்கு எண்ணெயைக் கொண்டுசெல்லும் குழாய்களில், நேற்றுத் திடீரென ஏற்பட்ட குண்டு வெடிப்பால், பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

பக்தாத்தில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்கப் படையினருக்கான எண்ணெய் விநியோகத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதற்காகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தக் குண்டுவெடிப்பால் - பக்தாத்திலுள்ள பிரதான மின்சார நிலையமும் செயலிழக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்ட எண்ணெய்க் குழாய்களைத் திருத்துவதற்கு, இன்னமும் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தேவைப்படுமென - வடக்கு எண்ணெய்க் கம்பனியின் தலைவர் அடில் அல்-காசில் தெரிவித்தார்.

### தொடரும் தாக்குதல்

இது இவ்வாறிருக்க - அமெரிக்கப் படையினர் மீதான ஈராக்கியர்களின் தாக்குதல்களும் தொடர்ந்து வருகின்றன.

எண்ணெய்க் குழாய் வெடிக்க வைக்கப்பட்ட இடத்திற்கு அண்மையில் நடந்த வாகனக் கண்ணிவெடித் தாக்குதலில், இரண்டு அமெரிக்கப் படையினர் படுகாயமடைந்தனர்.

இதேவேளை - பக்தாத்திற்கு 20 கிலோமீற்றர்கள் வெளியே இன்னுமொரு இடத்தில் - அமெரிக்க வாகன அணிமீது நடத்தப்பட்ட கிரனைட் தாக்குதலில் - ஒருவர் கொல்லப்பட்டார். இன்னொருவர் படுகாயமடைந்தார்.

## ஹமாஸ் முக்கியஸ்தர் கொலையால் காஸாப் பகுதியில் பெரும் பதற்றம்!

### தற்கொலைத் தாக்குதல்களும் இனி அதிகரிக்கலாம்



மேற்குக்கரையில் வைத்து - நேற்றுமுன்தினம் இரவு, ஹமாஸ் இயக்கத்தின் முக்கிய தலைவரான அப்துல்லா கவாஸ்மேயைக் கொன்றதன் மூலம் - இஸ்ரேலியர்கள் சமாதான முயற்சிகளைச் சீரழித்துவிட்டதாக - பலஸ்தீனப் பிரதமர் மஹ்மூட் அப்பாஸின் பேச்சாளர் கூறியுள்ளார்.

ஹமாஸ் இயக்கத்தின் முக்கிய தலைவரான அப்துல்லா காவஸ்மே, ஹெப்ரோனில் வைத்து இஸ்ரேலிய விசேட படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தாங்கள் அப்துல்லாவைக் கைது செய்ய முயன்றபோது, அவர் இஸ்ரேலியப் படையினரின் துப்பாக்கியைப் பறிக்க முற்பட்ட வேளையிலேயே, சுடப்பட்டதாக - இஸ்ரேலியப் படைத்தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் - அப்துல்லா கவாஸ்மே, பள்ளிவாசலொன்றின் வாசலில் நின்றபோதே சுடப்பட்டதாக, பலஸ்தீனர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து - 'இஸ்ரேலியர்கள் மீதான தமது தாக்குதல்கள் விரைவில் தீவிரமாக்குவோம்' - என ஹமாஸ் இயக்கத்தினர் அறிவித்துள்ளனர்.

'அப்துல்லா கொலை மூலம் - இஸ்ரேலியர்கள் தமது படுகொலைத் திட்டத்தைத் தொடர்வது உறுதியாகியிருக்கிறது' என - பலஸ்தின அமைச்சரான யசீன் அபெட் ரபோ கூறியிருக்கிறார்.

இதேவேளை- அப்துல்லாவின் கொலையைத் தொடர்ந்து, ஹமாஸ் அமைப்பினர் இனி எவ்வேளையும் தற்கொலைப்படைத் தாக்குதல்களை சராமாரிக்கு இஸ்ரேலில் நடத்தலாம் என்ற அச்சமும் அங்கு எழுந்திருக்கிறது.

## கென்யாவில் தினமும் எயிட்ஸுக்கு 700 பேர் பலியாகும் அவலநிலை!

### தேசிய பேரழிவு நோயென அந்நாட்டரசு பிரகடனம்

ஒவ்வொரு மாதமும் - எயிட்ஸ் அல்லது எச்.ஐ.வி. தொற்றினால் ஏற்படும் வேறு நோய்களுக்களாகி - பதினைந்து சிறைக்காவலர்கள் கென்யாவில் பலியாகி வருவதாக, அந்நாட்டின் சிறைச்சாலைகள் ஆணையாளர் ஏப்பிரஹாம் காமாகில் தெரிவித்தார்.

இந்த மரணங்கள் - ஏனைய சிறைக்காவலரிடமும், சிறைக்கைதிகளிடமும் பீதியை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை - அரசாங்கத்தின் உத்தியோகபூர்வத் தகவல்களின்படி- நாளாந்தம் 700 பேர் வரையில் கென்யாவில் எயிட்ஸ் நோயால் பலியாவது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து - எயிட்ஸை, நாட்டைச் சீரழிக்கும் தேசிய அழிவாக- அந்நாட்டரசு அறிவித்திருக்கிறது.

கென்யா முழுவதுமுள்ள சிறைச்சாலைகளில் இருக்கும் 50,000 சிறைக்கைதிகளைப் பாதுகாப்பதற்காக, 17,000 சிறைக்காவலர்கள் கடமையிலீடுபட்டுவருகின்றனர்.

தமது குடும்பங்களிலிருந்து தூரவிலகி இருப்பதால், முறைதகாத பாலியல் உறவுகள் - சிறைகளை ஆக்கிரமித்திருப்பதாலேயே - எயிட்ஸ், சிறைக் காவலர்களிடம் வேகமாகப் பரவுவதாக, கென்ய மருத்துவ வட்டாரங்கள் கூறுகின்றன.

இது இவ்வாறிருக்க - கென்யாவிலுள்ள வைத்தியசாலைகளில் 50 முதல் 60 சதவீதமான படுக்கைகள்- எயிட்ஸ் நோயாளிகளாலேயே நிரம்பியிருப்பதாக - கென்யாவின் பிரதம இராணுவத் தளபதியான லெப்ரினன்ட் ஜெனரல் கோன் கோச் திடுக்கிடும் தகவலொன்றையும் வெளியிட்டுள்ளார்.

கென்ய இராணுவத்தில் கூட, சகல தரங்களிலும் எயிட்ஸ் நோயாளிகள் பெருகியிருப்பதாகவும்,

வாராந்தம் பத்துப் படையினர் வரை எயிட்ஸுக்கு இலக்காகி மரணமடைவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பிரான்ஸில் விசாரணை

ஈரானியப் போராளிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பிரான்ஸில் வைத்துக் கைதான 17 பேர் மீதான விசாரணைகள் ஆரம்பமாகவுள்ளன.

இவர்களுக்கும் சர்வதேச பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவோருக்கும் தொடர்புகள் ஏதும் உள்ளதா என்பது தொடர்பாக, பிரெஞ்சு நீதிபதிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

கைதானவர்களில் - ஈரானிய மக்கள் முஜாகுதீன் அமைப்பைச் சேர்ந்த மர்யம் ரஜாலியும் உள்ளடங்குவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - கைதான ஈரானியர்களை விடுவிக்குமாறு கோரி, பிரான்ஸிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஈரானியர்கள் ஆர்ப்பாட்டங்களைச் செய்து வருவதும்,

இவற்றில், பலர் தம்மைத் தாமே எரித்து எதிர்ப்பை வெளிக்காட்டி வருவதும் குறிப்பிடத்தக்கது.

## இந்தியப் பிரதமர் வாஜ்பாய் சீனாவுக்கு முக்கிய விஜயம்



இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், ஆறுநாள் விஜயமாக சீனத் தலைநகர் பீகிங் சென்றிருக்கிறார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவுக்கான விஜயம் எனக் கூறப்படும் இப்பயணம் - கடந்த பத்தாண்டுகளில், இந்தியப் பிரதமர் ஒருவர் சீனா சென்றிருக்கும் முக்கியத்துவத்தையும் கொண்டிருக்கிறது.

சீனாவுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதே, இந்த விஜயத்தின் முக்கிய நோக்கம் எனவும் -

இரண்டு நாடுகளுக்கும் இடையே இனிமேல் புதிய உறவும், நம்பிக்கையும் கட்டிவளர்க்கப்படும் எனவும்,

பீகிங் புறப்படுவதற்கு முன்னர் செய்தியாளரிடையே இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார்.

இதேவேளை -

இந்த விஜயத்தில் - சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது பற்றியும் பேசப்படுமென சீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# 'வன்னி ரெக்' தொழில்நுட்பக் கல்லூரி இன்று கிளிநொச்சியில் திறப்பு விழா!

சர்வதேச தமிழ் தொழில்நுட்ப வியலாளர் கழகத்தினால் நிறுவப் பட்டுள்ள 'வன்னி ரெக்' என்ற உயர் தொழில்நுட்பக் கல்லூரி, இன்று கிளிநொச்சியில் திறந்து வைக்கப் படவுள்ளது.

கலிபோர்னியாவைத் தலைமை யகமாகக்கொண்ட சர்வதேச தொழில் நுட்பவியலாளர் கழகம், அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்ட ஒரு அமைப்பாக இயங்கி வருகின் றது. இலங்கை அரசாங்கமும், இந் தக் கழகத்தை ஒரு தொண்டு நிறு வனமாக இயங்குவதற்கு அங்கீகா ரம் வழங்கியுள்ளது.

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தை ஏனைய சர்வதேச நாடுகளில் உள் ளது போன்று, தொழில்நுட்ப ரீதியில் வளர்த்துக் கொள்வதன்மூலம் உயர் தொழில்நுட்பத்தோடு, வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல், அதியுயர் தெழில்நுட்பத்தோடு, சம் பந்தப்பட்ட வியாபார நடவடிக்கை களை ஊக்குவித்தல் போன்ற பல் வேறு அபிவிருத்திப் பணிகளை இந்த அமைப்பு மேற்கொள்ளும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த 'வன்னி ரெக்' நிறுவனத்தை எதிர்காலத்தில் பல்கலைக்கழகத் திற்கு சமமாக உருவாக்குவதற்கும், சிறந்த தொழில்நுட்பவியலாளர்களை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சியில் முதற்கட்ட மாக - 60 மாணவர்கள் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்டு ள்ளனர். இவர்களுக்கு முதற்கட்ட மாக, ஒன்பது மாதகாலப் பயிற்சி வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படு கின்றது.

# ஜெயலத் - மகேஸ்வரன் முரண்பாடுகள் தீவிரம்!

(கொழும்பு)

அமைச்சர்கள் - ஜெயலத் ஜெய வர்த்தனவுக்கும், மகேஸ்வரனுக்கும் இடையிலான முரண்பாடு மேலும் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

வடக்கு மீன்பிடி லிமிட்டெட்டை, அமைச்சர் மகேஸ்வரனின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப் பட்டதையடுத்தே, இந்த முரண்பாடு கள் தீவிரமடைந்துள்ளன.

முன்னர் இந்த நிறுவனம் புனர் வாழ்வு அமைச்சின் கீழ் இயங்கி வந்தது.

இதேவேளை, இந்த நிறுவ னத்தை அமைச்சர் மகேஸ்வரன் கையாள்வது கடினம் என்று- பிரதம ருக்கு, வடக்கு கடற்தொழில் சங்கங் கள் கடிதம் அனுப்பியதையடுத்து, இந்த முரண்பாடு தீவிரமடைந்திருப் பதாக - பிரதமர் அலுவலக வட்டா ரங்கள் தெரிவித்தன.

# முஸ்லிம் பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல்; அரசிடம் கோருகிறது முஸ்லிம் காங்கிரஸ்!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதே சங்களில் - உள்ளூராட்சி மன்றங்க ளுக்கான தேர்தலை மூன்று மாதத் துக்குள் நடத்துமாறு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, அரசாங் கத்திடம் கோரவுள்ளது.

இது தொடர்பான விசேட தீர்மா னம், அடுத்த வாரம் நடைபெறவுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் அதியுயர்பீடக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் என்று, அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில், உள்ளூராட் சித் தேர்தலை நடத்துமாறு - தேர் தல் ஆணையாளரை முஸ்லிம் காங் கிரஸ் வலியுறுத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சந்திரிகாவுக்கு நிகரான பதவியை கூட்டணியில் ஜே.வி.பி கோருகிறது!

(கொழும்பு)

ஜே.வி.பிக்கும், சிறிலங்கா சுதந் திரக் கட்சிக்கும் இடையிலான கூட் டணியில் - தமது கட்சிக்கும் உயர் பொறுப்பு வழங்கவேண்டும் என, ஜே.வி.பி வற்புறுத்தி வருகின்றது.

இதனால், இந்த இரு கட்சிகளும் இணைந்து அமைக்கவுள்ள கூட்ட ணியில் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வகிக்கும் பொறுப்புக்கு நிகரான - பொறுப்பான பதவியை உருவாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

இந்த கூட்டணியில் உபதலை வர் பதவியை ஜே.வி.பிக்கு வழங்க சுதந்திரக் கட்சி இணங்கியபோதும், ஜே.வி.பி. உயர் பொறுப்புமிக்க தலைமைப் பதவியே தமக்குத் தரப் படவேண்டும் எனக்கோரி வருகிறது.

முன்னர், கூட்டணியின் பொதுச் செயலாளர் பதவி, தமக்குத் தரப்பட வேண்டும் என - ஜே.வி.பி. கேட்டிருந் தது.

ஆனால், சிறிலங்கா சுதந்திரக் கட்சி - பொதுச் செயலாளர் பதவியை ஜே.வி.பிக்கு வழங்க மறுப்புத் தெரி வித்திருந்தது.

தற்போது, பொதுச் செயலாளர் பதவியைவிட - அதிகாரமுள்ள தலைமைப் பதவியை ஜே.வி.பி. கோரியுள்ளது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, கூட்டணியில் வகிக்கும் பதவிக்கு இணையான பதவியையே ஜே.வி.பி. எதிர்பார்ப்பதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை, புதிய கூட்டணி யின் செயலாளராக அநுரா பண் டாரநாயக்கவை நியமிக்க, சிறிலங்கா சுதந்திரக் கட்சி விருப்பம் கொண்டி ருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திரக் கட்சியுடனான கூட்ட ணியில், உயர் பதவிக்கு ஜே.வி.பி. சார்பில் நந்தன குணதிலகவை நிய மிக்க ஜே.வி.பி தீர்மானித்துள்ளது. ரில்வின் சில்வா செயலாளராகவும், விமல் வீரவன்ச பிரசார செயலாளரா கவும் தொடர்ந்து பதவிவகித்து, கட் சியை வலுப்படுத்தும் நடவடிக்கை யில் ஈடுபடவுள்ளனர். இதனாலேயே, கூட்டணியின் உயர்பதவிக்கு நந் தன குணதிலகவை நியமிக்க ஜே. வி.பி. தீர்மானித்துள்ளது.

இந்த முன்னணியின் - பொருளா ளராக மங்கள சமரவீரவையும் நிய மிக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

# காணாமற்போனோர் குறித்து அரசாங்கம் மீது வழக்கு!

## கொழும்பிலிருந்து சட்டத்தரணிகள் வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் படையின ரால் கைதுசெய்யப்பட்டு, காணாமற் போனோர் விவகாரம் தொடர்பாக - அரசாங்கத்துக்கு எதிராக உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய் யப்படவுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக, காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காகக் கொழும்பிலிருந்து மனித உரிமை கள் சட்டத்தரணிகள் சிலர் யாழ்ப் பாணம் வருகைதரவுள்ளனர்.

# நச்சுப் புகை பாதித்த சிப்பாய்: விசாரணைகள் ஆரம்பம்!

## இராணுவப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

வெலிஓயா முன்னணிக் காவலர ணில் கடமையாற்றிய சிப்பாய் ஒருவர், நச்சுப்புகையால் பாதிக்கப் பட்டது தொடர்பாக ஆராயும் விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ண தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட சிப்பாயின் இரத்த மாதிரி, கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிலையத்துக்கு பரிசோத னைக்காக அனுப்பிவைக்கப்பட்ட போதும் - மருத்துவர்களின் வேலை நிறுத்தத்தால், பரிசோதனை அறிக்கை கிடைப்பது தாமதமடைந் துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

புலிகளின் 1 - 4 தளத்துக்கு அருகிலுள்ள ஆண்டான்குளம் முன் னணிக் காவலரணில் கடமையில் இருந்தபோது, கே.சமன்குமார என்ற இந்தச் சிப்பாய் இனந்தெரியாத நச்சுப்புகைப் பாதிப்புக்குள்ளா னதாக பிரிகேடியர் சனத் கருணா ரட்ண மேலும் தெரிவித்தார்.

# தொடர் வேலை நிறுத்தங்களை தடைசெய்வதற்கு ஆலோசனை!

தொடர்ச்சியாக நடத்தப்படும் வேலைநிறுத்தப் போராட்டங்களைத் தடைசெய்வது பற்றி, அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக அறி விக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அரசாங்க மருத் துவ அதிகாரிகள் மேற்கொண்ட வேலைநிறுத்தம், நோயாளர்களைப் பெரிதும் பாதித்துள்ளதாலேயே - அரசாங்கம் இந்த முடிவை எடுத்தி ருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக, நோயாளர்க ளின் உரிமையைப் பாதுகாக்கும் தேசிய இயக்கம், அரசாங்கத்துக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள் ளது. மருத்துவர்களின் வேலைநிறுத் தப் போராட்டத்தினால், ஆயிரக் கணக்கான நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மருத்துவர்கள் தமக்கு சம்பள அதிகரிப்பை அர சாங்கத்திடம் கோரிப்பெறலாம்.

ஆனால், மக்களின் வரிப்பணத் தில் சேவையாற்றுவோர், மக்களுக்கு சேவையாற்ற வேண்டும். இதைத் தட்டிக்கேட்கும் உரிமை எமக்கு உள்ளது. இத்தகைய வேலைநிறுத் தங்களைத் தடைசெய்ய, அரசு நட வடிக்கை எடுக்கவேண்டும் என்று, நோயாளர்களின் உரிமையைப் பாதுகாக்கும் தேசிய இயக்கம் - அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

# பொங்கு தமிழ் சுமுகமாக நடக்க ஒத்துழைப்புத் தரவேண்டும்!

## கண்காணிப்புக்குழுவிடம் இன்று மகஜர்

(யாழ்ப்பாணம்)

இவ்வார இறுதியில் நடைபெற விருக்கும் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வை சுமுகமாக நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கும்படி, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரி டம் கோரிக்கை முன்வைக்கப்பட விருக்கிறது.

'பொங்கு தமிழ்' நிகழ்ச்சியைச் சுமுகமாக நடத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்துதருமாறு கோரி, இன்று காலை 10.30 மணிக்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வின் - யாழ். மாவட்டப் பிரதிநிதி கரினா எரிக்சனிடம், யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் மகஜர் ஒன்று கையளிக்கப்படவுள்ளது.

# பொங்கு தமிழ் பிரகடனம்...

அலுவலகத்தில் நேற்றுக்காலை 11 மணியளவில், இவ்விடயம் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரை யாடலின்போது - 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்குப் பூரண ஆதரவு வழங்குவது என்று தீர்மானிக்கப்பட் டது.

அத்துடன், 'பொங்கு தமிழ்' பிரக டனத்தை - ஐக்கிய நாடுகள் சபை யின் செயலாளர் நாயகம் கோபி அனானுக்கும் மற்றும் நோர்வே, ஜப் பான், இந்தியா போன்ற நாடுகளின் அரசாங்கங்களுக்கும் அனுப்புவதெ னவும் நேற்றைய கூட்டத்தில் தீர் மானிக்கப்பட்டது.

'பொங்கு தமிழ்' நிகழ்வுக்கு மக் களைத் திரட்டுவது தொர்பாகவும், தென்னிலங்கை மற்றும் சர்வதேச பத்திரிகையாளர்களை அழைப்பது தொடர்பாகவும் இந்தக் கலந்துரை யாடலில் ஆராயப்பட்டது.

மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் பரமநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கலந் துரையாடலில் - அரச சார்பற்ற நிறு வனங்களின் பிரதிநிதிகளும், பொது அமைப்புக்கள், மாணவர் அமைப்புக் கள், மத அமைப்புக்கள் ஆகியவற் றின் பிரதிநிதிகளும் கலந்துகொண் டனர். (லி,அ)

## தலை துண்டிக்கப்பட்ட சடலம் மீட்பு

புங்குடுதீவு கடற்பரப்பில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில், ஆணின் சடலம் ஒன்று நேற்றுமுன்தினம் கரையொதுங்கியுள்ளது.

தலை வெட்டப்பட்டுக் காணப் படும் இந்தச் சடலம், நேற்று நண்பகல் ஊர்காவற்றுறை பொலிஸாரால் மீட் கப்பட்டு, போதனா வைத்தியசாலை யில் ஒப்படைக்கப்பட்டது. (ரா,ச)

# கடற்படை....

என்று சொல்லப்பட்டாலும், அவர் இச் சம்பவத்தில் கூடிய பங்கு வகித்ததா கவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை- மூழ்கடிக்கப்பட்ட கப் பல் தொடர்பான படங்களை இந்தி யாவே வழங்கியதாகவும், மூழ்கிய கப்பல் கடலுக்கு அடியில் 3 கிலோ மீற்றர் ஆழத்தில் கிடப்பதாகவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

# லண்டனில் யாப்பு...

அதிபர் கமலசபேசனும் லண்டனுக் குச் சென்றிருப்பதாகத் தெரியவரு கிறது.

புலிகள் கோரியதன்படியான - இடைக்கால நிர்வாகத் திட்டத்தையே அரசாங்கம் முன்வைக்கும் என்ப தையே, சட்டமா அதிபரின் லண்டன் பயணம் எடுத்துக்காட்டுவதாகக் கொழும்பு அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

ஆனால், வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு, அரசியலமைப்புக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும் என்பதிலும், சகல சமூகங்களின் பங்கேற்பும் இருக்க வேண்டும் என்பதிலும், அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தி வருவதா கத் தெரிகிறது.

லண்டனுக்குப் புறப்பட முன்னர், ஜனாதிபதி சந்திரிகாவைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேச்சு நடத்தியபோது, வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வா கக் கட்டமைப்புக் குறித்து, அரசாங் கம் தீர்மானம் எதனையும் எடுக்க வில்லை எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

லண்டன் சென்றுள்ள பிரதமர் ரணிலுடன், அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ ஆகியோரும் அங்கு சென்றிருக்கின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க- பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளே யர், பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் ஜக் ஸ்ரோ, உள்துறை அமைச்சர் டேவிட் பிளங்கர்ட் ஆகி யோரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

அதேவேளை - பிரித்தானிய உள்துறை அமைச்சர் டேவிட் பிளங் கர்ட்டை, பிரதமர் சந்திக்கவுள்ளமை குறித்து - அரசியல் வட்டாரங்கள் வியப்புத் தெரிவித்துள்ளன.

இலங்கையிலிருந்து தஞ்சம் கோருபவர்களுக்கு பிரிட்டன் தஞ்ச மளிக்கமாட்டாது என, டேவிட் பிளங் கர்ட் அறிவித்துள்ள நிலையில்- பிர தமர் இதனை ஆதரிப்பாரா, எதிர்ப் பாரா என்பது தெரியவில்லை என வும் அவ்வட்டாரங்கள் கூறுகின்றன.

கண்ணீர் காணிக்கை

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் வர்த்தகத்துறை ஆசிரியர்
திரு. இ.கருணாகரன் அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி சரஸ்வதி இராசையா
அவர்கள் இறைபதமடைந்த செய்திகேட்டு அதிர்ந்துபோனோம். ஆறாத் துயரில் உள்ள ஆசிரியரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறுவதோடு, அன்னையின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சயன்ஸ் அக்கடமி,
நல்லூர். (சி-1106)
இயக்குநர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.